17th
SEPTEMBER
2024

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 48 | பக்கங்கள் - 17 | editor.uthayam@gmail.com

குற்றச் செயல்களில் ஈடுபட்டோர் நாட்டை விட்டு வெளியேற முஸ்தீபு

எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம் என அச்சம்!

கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு!

எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் எவரும் எதிர்பாராத முடிவுகள் வெளியாகலாம் என்ற பரபரப்புக்குள் பெருந்தொகையான அரசியல்வாதிகள் அரச உயர் அதிகாரிகள் ஊழல் நிதி மோசடிகளுடன் தொடர்புபட்டோர் என பெருந்தொகையானோர் நாட்டை வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியக் கிடைத்துள்ளது.

02ம் பக்கம்பார்க்க...

மனித குலத்தின் வழிகாட்டி அண்ணலார்

ஜம்மியதுல் உலமாவின் மீலாத் வாழ்த்து செய்தி

“ரபீஉன்” என்றால் வசந்தம் என்று பொருள்படும். வசந்த காலமானது பூமிக்கு அழகையும் ரம்மியத்தையும் பசுமையையும்

15ம் பக்கம்பார்க்க...

ரணிலுக்கு ஆதரவளிக்குமாறு நாமலிடம் வேண்டுகோள்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து நாமல் ராஜபக்ஷவை விலக்கிக் கொள்ளுமாறும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியின் ஆதரவை

02ம் பக்கம்பார்க்க...

தமிழரசுக் கட்சி, ஈரோஸ் சஜித்துக்கு ஆதரவு

தமிழரசுக் கட்சியும், ஈரோஸ் ஜனநாயக முன்னணியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கத்

02ம் பக்கம்பார்க்க...

முஸ்லிம்களின் எந்தவொரு கடமையும் நீக்கப்பட மாட்டாது

சாய்ந்தமருதில் அனுர குமார உறுதி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம்கள் என் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை எப்போதும் உடைக்க மாட்டேன். அதனைப் பாதுகாப்பேன் என நான் உங்களுக்கு உறுதிமொழி வழங்குகின்றேன் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்கவை ஆதரித்து ஏற்பாடு செய்த கல்முனை தொகுதியின்

வெற்றிக்கான மாபெரும் தேர்தல் பிரசார கூட்டம் (13)

02ம் பக்கம்பார்க்க...

மக்களின் வாழ்க்கை சுமையை 2025ல் முடிவுக்கு கொண்டு வருவேன்

- தெஹிவளையில் ரணில் விக்கிரமசிங்க -

மக்களின் வாழ்க்கைச் சுமைக்கான போராட்டத்தை அடுத்த வருடத்தில் முடிவுக்கு கொண்டுவருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதாரத்தை முறையாக முகாமைத்துவம் செய்து, ரூபா மேலும் வலுவடையச் செய்து, பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்க கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதாகவும் இறுதியில் நிவாரணம் கிடைக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தெஹிவளையில் இடம்பெற்ற ‘ரணிலால் இயலும்’ வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

03ம் பக்கம்பார்க்க...

இலங்கையின் தேசிய உற்பத்தி அதிகரிப்பில் பெண்களின் பங்களிப்பு முக்கியமானது

- ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர -

நாட்டின் மொத்த தேசிய உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபடாத பெண்களை ஈடுபடுத்துவதே தமது நோக்கமாகும் என சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

கலல்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

02ம் பக்கம்பார்க்க...

நல்லடக்கமா எரிப்பதா என்ற போது நாமே வீதிக்கு இறங்கி போராடினோம்

- காத்தான்குடியில் சஜித் பிரேமதாச -

இன்று தலைவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் நல்லடக்கமா எரிப்பா என்ற பிரச்சினையின் போது வாய் மூடி மௌனத்திருந்தார்கள். அதற்கு எதிராக நாமே வீதிக்கு இறங்கி போராடினோம். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ∴பிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

குற்றச்…

(முன் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பாராத அரசியல் மாற்றங்கள் ஏற்படக் கூடுமென்ற அச்ச நிலை இவர்களுாக்கு ஏற்பட்டுள்ளதால் செல்ல வேண்டிய நாடுகளையும் திட்டமிட்டு வீசாக்களையும் பெற்றுள்ளதாகவும் இன்னும் ஓரிரு அவர்கள் நாட்டை விட்டு வெளியேறக் கூடுமென்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாரிய நிதி மோஷடிகள் சட்ட விரோத பணப் பரிமாற்றம் ஆட் கடத்தல்கள் கொலைகள் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டோரே இவ்வாறு செல்வதற்கு முயற்சித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்பு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானும் தேர்தல் தினத்துக்கு முன்பு 80 அரசியல்வாதிகள் நாட்டை விட்டு வெளியேற வீசாக்கள் பெற்றுள்ளமை குறித்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நல்லடக்கமா?…

(முன் பக்கத் தொடர்ச்சி)

காத்தான்குடியில் தெரிவிப்பு.

அநுரகுமார திசாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் தனக்கும் இடையில் வித்தியாசம் இருக்கின்றது. நல்லடக்கம் செய்வதா எரிப்பதா என்கின்ற பிரச்சினையின் போது தலைவர்கள் என்று கூறிக் கொள்கின்றவர்கள் அந்தப் பிரச்சினையை வைத்து எவ்வாறு செயற்பட்டார்கள் என்று ஆராய்ந்து பார்க்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன். இவர்கள் அன்றைய காலத்தில் முஸ்லிம் சமூகத்திற்காக முன்நிற்பதற்கு அச்சமடைந்தார்கள். அன்று எவ்வாறு இருந்தவர்கள் இன்று முஸ்லிம்களுடைய வாக்குகளை எதிர்பார்த்து முஸ்லிம்களிடத்தில் செல்கின்றார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்களை எரிப்பதா நல்லடக்கம் செய்வதா என்கின்ற பிரச்சினையின் போது உலக சுகாதார ஸ்தாபனம் இது தவறான விடயம் என குறிப்பிட்டது. ஆனால் முஸ்லிம் சமூகத்தை பாதிப்பிற்குள்ளாக்கும் வகையில் கோட்டாபய அரசாங்கம் செயற்பட்டது. அன்று முஸ்லிம் சமூகத்துக்காக ஐக்கிய மக்கள் சக்தியே முன்னின்று செயற்பட்டது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அன்று முஸ்லிம் சமூகத்தை பழி வாங்குவதற்காகவே அவர்கள் அவ்வாறு செயற்பட்டார்கள். இந்த தவறான செயற்பாடுகளுக்கு எதிராக சஜித் பிரேமதாசவாகிய நானும் ஐக்கிய மக்கள் கூட்டணியுமே வீதிக்கிறங்கியது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன, மத, குல பேதங்களின்றி அனைவரையும் சம அளவில் மதிக்கின்றவர்களே நாட்டின் தலைவர்களாக வேண்டும். அவ்வாறான தலைவர் ஒருவரை நியமித்துக் கொள்வது மக்களின் பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 60 ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் செப்டம்பர் 15 ஆம் திகதி காத்தான்குடியில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

பலஸ்தீன மோதலின் போது அதற்காக ரணசிங்க பிரேமதாச முன்நின்றதோடு, இன்று தானும் பலஸ்தீன மக்களின் உரிமைக்காக முன்நிற்கின்றேன். ஹிட்லரின் நாசிசப் படை ஜெர்மனிக்கு செய்ததையே இன்று பலஸ்தீனத்திலும் செய்கின்றார்கள். அவ்வாறான பெரும் பாதிப்புக்கு உள்ளான இஸ்ரேல் இன்று பாலஸ்தீன மக்களை இலக்கு வைத்து மேற்கொள்கின்ற பாரிய அரச தீவிரவாதத்தை வன்மையாக கண்டிக்கின்றோம். ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் இதனை தெரிவிப்பதற்கு அச்சமடைந்தாலும், இதனை நாம் வெளிப்படையாக தெரிவிக்கின்றோம். இந்த இரண்டு அரசாங்கங்களும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் காணிகளை பயன்படுத்தி காணி இல்லாதவர்களுக்கு காணிகளையும், வீடில்லாதவர்களுக்கு வீடுகளையும் பெற்றுக் கொடுப்போம். தான் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுத்தது போன்று மீண்டும் வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுப்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்தோடு நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளையும், அனைத்து வைத்தியசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாகவும் வைத்தியசாலைகளாகவும் மாற்றுவோம். அத்தோடு ஆங்கில மொழிக் கல்வியையும் வழங்குவோம் என தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர், இளைஞர்களுக்காகவும் தனியான வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம் எனவும் குறிப்பிட்டார்.

இன மத குல வகுப்பு கட்சி பேதங்கள் இன்றி மனிதநேயத்தை முதன்மைப்படுத்தி மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல்கள் மூலமும், இணக்கப்பாட்டோடும், ஒற்றுமையாகவும் தீர்வினை காண்கின்ற இந்த பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சகலருக்கும் அழைப்பு விடுத்தார்.

இலங்கையின்…

(முன் பக்கத் தொடர்ச்சி)

அங்கு மேலும் உரையாற்றிய திலித் ஜயவீர,

“நான் அரசியலுக்கு வருவதற்கு முக்கிய கரணம் இலங்கைப் பெண்கள்தான். நான் பல வருடங்களாக இலங்கை பெண்களிடம் உரையாற்றி வருகிறேன்.

இலங்கையில் பெண்களின் தொழில் முயற்சியை வெளிக்கொண்டு வர வேண்டும்.

உலகில் உள்ள அனைத்து தாய்மார்களையும் விட இலங்கை தாய்மார்கள் ஏற்கனவே ஒரு வெற்றிகரமான தொழில்முனைவோராக மாறியுள்ளார்.

உங்கள் குடும்பத்தின் குடும்ப வருமானம் பாதியாகக் குறைந்து, வாழ்க்கைச் செலவு நான்கு மடங்கு அதிகரித்துள்ள நேரத்தில், குடும்பம் இன்னும் அப்படியே இருக்கிறது.

மனைவிகள் குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் இருப்பார்கள். 53மூ பெண்கள் உள்ளனர், அவர்களில் பெரும்பாலோர் பொருளாதார செயல்பாட்டில் ஈடுபடவில்லை.

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிக்க இலங்கைப் பெண்களும் பொருளாதாரச் செயற்பாட்டில் உள்வாங்கப்பட வேண்டும்.

இலங்கைப் பெண்கள் ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையை உருவாக்கக்கூடிய பாத்திரம் என்று நான் நினைக்கிறேன்.

ஏனென்றால் நீங்கள் உங்கள் கணவரை வீட்டிலும் நிர்வகிக்கிறீர்கள். அதுதான் தொழில்முனைவு.

அந்த நிர்வாகத்தினூடாக இலங்கை குடும்பத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

எனவே இந்த முறை இலங்கைப் பெண்கள் தனது குழந்தைகளின் எதிர்காலம் குறித்து சரியான முடிவை எடுத்து நட்சத்திரமாக மாறுவார்கள் என்று தெரிகிறது.” என்றார்.

தமிழரசுக்…

(முன் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளனதமிழரசுக் கட்சி சஜித்துக்கு ஆதரவு வழங்குவது என ஏற்கெனவே தீர்மானித்திருந்த போதிலும் கட்சி மட்டத்தில் விமர்சனங்கள் எழுந்ததால் இன்றைய தினம் கூடி முடிவு எடுப்பதென முடிவாகியது.இதன்படி வவுனியாவில் இன்று காலை கலந்துறையாடிய தமிழரசுக் கட்சியினர் சஜித்துக்கே ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை ஈரோஸ் ஜனநாயக முன்னணி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. கட்சியின் நிறைவேற்றுக் குழு கட்சி பிரமுகர்கள் பிராந்திய பிரதிநிதிகள் உட்பட ஏனைய கட்சி நலன் விரும்பிகளுடன் நடாத்திய கலந்துரையாடலின் பின் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சஜித்துக்கான…

(முன் பக்கத் தொடர்ச்சி)

வழங்குமாறும் தொடம்பஹல ராகுல தேரர் இன்று (16) முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று (16) இடம்பெற்ற மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கான மாநாடு இன்று பிற்பகல் நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நடைபெற்றது.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், தற்போதைய சூழ்நிலையில் இந்த நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்று குறிப்பிட்டார்.

அசர வேகத்தில்
வலம் வந்து
கொண்டிருக்கும்
உதயம்
பத்திரிகையில்
உங்களது
நிறுவனங்களின்
விளம்பரங்களை
பிரசுரிக்க
வேண்டுமாயின்
தொடர்புகளுக்கு:
070 239 7210

ஐக்கியமான
நாட்டின்
வெற்றிக்கு!
A WIN FOR ALL
සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa

மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன் அவர்கள் ஜனாதிபதியை மிகவும் உற்சாகமாக வரவேற்றனர்.

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில், புதிய பொருளாதாரம், புதிய நாடு மற்றும் புதிய அரசியல் முறைமையைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தை தாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார். புதிய பொருளாதாரத்தை நாட்டுக்கு வழங்குவதே தனது தேவை எனத் தெரிவித்த ஜனாதிபதி, அதனை சஜித்துக்கோ அல்லது அனுரவுக்கோ செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்மசிங்க மேலும் கூறியதாவது:

"இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் என்னுடன் 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியை ஏற்க யாரும் முன்வரவில்லை. அந்த பதவிக்கு வேறு யாரும் இல்லாததால் நான் அப்போது பிரதமரானேன்.

அரசியல்வாதிகளாகிய எங்களுக்கு இரண்டு கடமைகள் உள்ளன. முதலில் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். இரண்டாவது, மக்களை வாழ வைக்க வேண்டும். ஆனால் அப்போது யாரும் அந்தப் பொறுப்பை ஏற்கத் தயாராக இருக்கவில்லை. அவர்களுக்கு எந்த தேவையும் இருக்கவில்லை.

இந்நாட்டு மக்களுக்கு உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு போன்றவற்றை வழங்க முடியாத நிலை இருந்த போது, அரசியல்வாதிகளாகிய அவர்கள் வருந்தவில்லையா? இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய கடமை தங்களுக்கு இருப்பதாக அவர்கள் நினைக்கவில்லையா? அன்று மக்கள் படும் இன்னல்களை புரிந்து கொள்ளாத சஜித்தும் அநுரவும் இன்று பதவியை கேட்கின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நாடு ஸ்திரமாக உள்ளது. ரூபாவை வலுப்படுத்தியுள்ளோம்.

இதனால், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைந்து வருகிறது. ஆனால் மக்களுக்கு இன்னும் பிரச்சினைகள் உள்ளன. பல குடும்பங்களில் வருமானத்துக்கும் செலவுக்கும் இடையே பெரிய போராட்டமே நடக்கின்றது எனலாம். அந்த போராட்டத்தை முடிக்கவே நான் முயற்சிக்கிறேன். ரூபாவைத் தொடர்ந்து வலுப்படுத்துவதால் அடுத்த ஆண்டு அந்த போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவோம் என்று எதிர்பார்க்கிறோம்.

நம் நாட்டைப் போன்ற நெருக்கடிகளை எதிர்கொண்ட ஏனைய நாடுகள் மீண்டும் எழுச்சி பெற நீண்ட காலம் எடுத்தது. அந்த நாடுகள் எடுக்கும் கடினமான நடவடிக்கைகளை நாம் எடுக்காமல் எவ்வாறேனும் அனைவரையும் பாதுகாத்து நாட்டை ஸ்திரப்படுத்த வேண்டும் என்று நான் நினைத்தேன். அதன்படி இன்று நாம் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

ஆனால் இந்த நிலைபேற்றுத்தன்மை மாறலாம். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை முன்னெடுக்காவிட்டால், இவை அனைத்தும் முடிவுக்கு வரும். இந்தத் திட்டத்தைத் தொடரவும், நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும் ஒரு ஆணையை நான் கேட்கிறேன். இந்த நாட்டிற்கு புதிய பொருளாதாரத்தை வழங்குவதே எனது தேவையாகும்.

இதை சஜித்திற்கோ, அனுரவிற்கோ செய்ய முடியாது. பல்வேறு நிவாரணங்களை வழங்குவதாக இருவருமே மக்களுக்கு அறிவித்து வருகின்றனர். சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அனுரகுமார என்னை விவாதத்திற்கு வருமாறு அழைத்தார். நான் அதற்குத் தயார் என்றேன். ஆனால் இதுவரை அதற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

ஆனால் சர்வதேச நாணய நிதியம் தற்போது நம் அனைவரின் கொள்கை அறிக்கைகளையும் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கொசெக் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "வரலாற்றில் மிக மோசமான சவாலை முறியடிக்க இலங்கைக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தின் நோக்கங்களை அடைவது மிகவும் முக்கியமானது"

மறுசீரமைப்புகளைத் தொடர வேண்டியது அவசியமாகும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் முடிவை இலங்கை மக்களே எடுக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் கண்ணோட்டத்தில், இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

ஆனால், இலங்கை தனது வரலாற்றில் சந்தித்த மிக மோசமான நெருக்கடியில் இருந்து முழுமையாக மீள வேண்டுமானால் இந்த வேலைத் திட்டத்தின் மூலம் பெற்ற சாதனைகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும்." எனவே, தற்போதுள்ள வேலைத்திட்டம் அவ்வாறே அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சஜித் அல்லது அநுர கூறுவது போன்று தற்போதைய வேலைத் திட்டத்தில் திருத்தம் செய்ய முடியுமா என்பது குறித்து இதில் சர்வதேச நாணய நிதியம் எதுவும் குறிப்பிடவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடன் எமது கடன் தொடர்பில் கலந்துரையாடி விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் திசைகாட்டி அறிவித்திருந்தது. அதற்கு பதிலாக மாற்று கடன் நிலைபேற்றுத்தன்மை பகுப்பாய்வை முன்வைப்பதாக அவர்கள் கூறினர்.

ஆனால் நாம் நடுத்தர வருமானம் கொண்ட நாடாக இருப்பதால், குறைந்த வருமானம் கொண்ட நாடுகளைப் போன்று கடன் நிலைபேற்றுத்தன்மை பகுப்பாய்வை மேற்கொள்ள முடியாது. சந்தை அணுகுமுறையைக் கொண்ட நாடுகளுக்கான இறையாண்மை ஆபத்து மற்றும் கடன் நிலைபேற்றுத்தன்மை பற்றிய கட்டமைப்பே எமக்கு பொருந்துகின்றது.

இவர்களுக்கா நம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்று பேசுகிறார்கள்?

சில நேரங்களில் நாம் குறுகிய காலத்தில் மிகவும் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். ஆனால் இறுதியில் எமக்கு நிவாரணம் கிடைக்கும். எனவே, இந்தப் பணியைத் தொடர உங்கள் ஆணையைத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புதிய பொருளாதாரம், புதிய நாடு, புதிய அரசியல் முறைமையைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நான் ஏற்கனவே ஆரம்பித்துள்ளேன். இப்பணியைத் தொடர அனுபவம் வாய்ந்த குழு முன்வர வேண்டும்.

எனவே, அந்த ஆணையை எனக்கு வழங்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்." என்றார்.

උස්සන රටකට
මගෙන් පටන් ගමු

தரையில் மிளிரும் நட்சத்திரம்
மகிழ்ச்சிமிகு தேசம்,
தொழில்முனைவு கொண்ட
அரசின் நிமித்தம்
புதிதாக
சிந்திப்போம்.
திலித் ஜயவீர
கட்சித் தலைவர் - மவ்பிம ஜனதா கட்சி

முஸ்லிம்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது மருதூர் சதுக்கத்தில் நடைபெற்றது.

”வளமான நாடு அழகான வாழ்க்கை” எனும் தொனிப்பொருளில், தோழர் அநுர குமார திசாநாயக்கவின்

கல்முனை தேர்தல் தொகுதி இணைப்பாளரும் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினருமான ஏ. ஆதம்பாவாவின் தலைமையில் இடம்பெற்ற இம்மாபெரும் விழாவில்,பேசிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்க மேலும் கூறுகையில்,

எதிர்வரும் சனிக்கிழமை தேர்தல். நாங்கள் என்ன செய்வது? நீங்கள் வாக்களிக்கத் தயாரா? நீண்ட காலமாக எங்கள் நாட்டு மக்கள் தலைவர்களைக் கொண்டு வந்தார்கள். ஆட்சிகளைக் கொண்டு வந்தார்கள். ஆட்சிகளை மாற்றினார்கள். தலைவர்களை மாற்றினார்கள். ஆனால், என்ன நடந்ததென்றால், நாடானது அதல பள்ளத்தில் விழுந்தது. பொதுமக்கள் ஏழைகளாக மாறினர். ஆனால், அரசாங்கங்கள் மூலமாக ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட ஆட்சியாளர்கள் வசதியாளர்களாக மாறினார்கள். நாடு ஏழையானது. பொதுமக்கள் ஏழையானார்கள். ஆகையினால், மிக முக்கியமான காரணம், இந்த ஆட்சியாளர்கள் எங்களது நாட்டை வெற்றி பாதைக்கு கொண்டு செல்ல முயற்சிக்கவில்லை. இந்த ஆட்சியாளர்கள் அவர்கள் தங்களை வெற்றி கொள்வதற்காகத்தான் முயற்சி செய்தார்கள்.

ஆகையினால், செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி ஓர் அரசாங்கத்தைக் ஆக்கிக் கொள்வோம். இந்த நாட்டைக் கட்டி எழுப்பக்கூடிய அரசாங்கம் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம்.

தற்போது இந்தத் தேர்தலை சற்று உற்று நோக்கிப் பார்க்கும் பொழுது தேசிய மக்கள் சக்தியின் வெற்றி உறுதியாகிவிட்டது. தெற்கிலே வாழுகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களும் கைகோர்த்துக்கொண்டு தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து இருக்கின்றார்கள். இந்த சாய்ந்தமருதிலே வாழுகின்ற முஸ்லிம் மக்களின் முடிவு என்ன?

ஆனால், இந்த வெற்றியை தவிர்ப்பதற்காக அவர்கள் பொய்களையும் கட்டுக்கதைகளையும் இட்டுக் கதைகளையும் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அண்மையில் ஹிஸ்புல்லாஹ் வந்தார். ஹிஸ்புல்லாஹ் இந்த இடத்துக்கு வந்து, எங்களைப்பற்றி மிக மோசமாக இழிவாக பேசிச் சென்றார். முஸ்லிம் மக்கள் தங்களுடைய மார்க்கக் கடமைகளில் முக்கியமாகக் கருதுகின்ற இரண்டு பெருநாட்கள். ஒன்று நோன்புப் பெருநாள் மற்றது ஹஜ்ஜ/ப் பெருநாள். ஹிஸ்புல்லாஹ் சொன்னாராம், நாங்கள் வந்தால், ஒன்றை நிப்பாட்டுவோம் என்று. ஹிஸ்புல்லாஹ்வின் தலையை கொஞ்சம் பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல. அதன் பின்னர் சொல்கிறார். முஸ்லிம்களுக்கு ஐந்து நேர தொழுகைக்கான இடம் கொடுக்க மாட்டோம் என்றார். அவர்களை நன்றாக பாருங்கள். முஸ்லிம் மக்களை ஏமாற்றி எவ்வாறு கதைக்கின்றார்கள். இந்த இடத்திலேயே நாங்கள் பார்க்கின்ற போது, திஸ்ஸ அத்தநாயக்க என்ன சொல்கிறார் என்றால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அங்கே பெரஹறா நடத்த விட மாட்டோம் என்று கூறுகிறார். அதேபோன்று அவரது மேடைக்கு வந்த சில மதகுருமார் சொல்கின்றார்கள். அவர்களுக்கு நாங்கள் வந்தால் தானம் கிடைக்காது என்று. இது அரசியல் கதையா?, இது அரசியல் விமர்சனமா? இதற்கு நாங்கள் சொல்வது இழிசொல். இதற்கு நாங்கள் சொல்வது பொய் என்று. உண்மையிலேயே மதம் தொடர்பாக கௌரவம் இருக்குமாக இருந்தால், உண்மையிலேயே மதம் தொடர்பாக நாங்கள் சுதந்திரத்தை எதிர்பார்த்தால், அரசியல் மேடைகளிலே சொல்லக்கூடாத விடயங்கள் அவை. இந்த சமயம் தொடர்பான விடயங்களை உசுப்பேத்தி விடுகிறார்கள். எங்களுடைய நாட்டிலே சிங்கள, தமிழ், முஸ்லிம், பேகர் என பல்வேறு இன மக்கள் வாழ்கின்ற நாடு. அதேபோன்றுதான் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற பல்வேறுபட்ட மதங்களைப் பின்பற்றி வருகின்ற நாடு. தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு பிரதான மொழிகளைப் பேசுகின்ற நாடு. சிங்களவர்களை எடுத்துக் கொண்டால், அவர்களுடைய உரித்தான கலாசாரம் இருக்கின்றது. தமிழ் மக்களுக்கு அவர்களுடைய கலாசாரம். அதேபோன்று முஸ்லிம் மக்களுக்கு அவருடைய கலாசாரத்தைக் கொண்ட நாடாக இருக்கின்றது. ஆகையினால், இந்த நாட்டின் எதிர்காலம் தங்கி இருப்பது, இவ்வாறு பல்வேறுபட்ட, மக்களுக்கிடையிலே ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலமாகத்தான். ஆகையினால், தேசிய மக்கள் சக்தியானது, உங்களுடைய மதத்தைப் பின்பற்றுகின்ற உரிமையை. உங்கள் மொழி உரிமையை. உங்களது கலாசார அடையாளத்தை. ஏற்றுக் கொள்ளக்கூடிய சுதந்திர நாட்டைத்தான் தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்கின்றது. ஆனால், ஹிஸ்புல்லாஹ் அதற்கு மாற்றமாக பொய்யைக் கூற முற்பட்டிருக்கின்றார்.

எங்களது தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டிருக்கின்றது. எந்தவொரு மதமாக இருந்தாலும், எந்தவொரு கலாசாரமாக இருந்தாலும், எந்தவொரு மொழியாக இருந்தாலும் இதற்காக அவர்கள் பல்வேறு விடயங்களிலேயே இதனை மாற்றமாகக் கருத்திற் கொண்டால், அதற்கு எதிராக அவர்களுக்கு முறைப்பாடு செய்து தண்டனை வழங்கக்கூடிய ஒரு கொமிஷனை நாங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

அரசியலுக்கு மதம் தொடர்பான வசனங்களை வெளியிடுவது, அதேபோன்று அரசியலுக்கு மதம் தொடர்பான விடயங்களைக் கூறுவது, இவ்வாறு சொல்வதை, செயற்படுத்துவதை நிறுத்துவது தான் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம். எங்களுக்கு தேவைப்படுவது என்னவென்றால், தான் தேசிய ஒற்றுமை உடனான நாடு. அனைவரும் சகோதரத்துடன் வாழக்கூடிய நாடு. எல்லோரும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஒரு நாடு. ஆகையால்தான் உங்களை நாங்கள் சந்திக்க வந்திருக்கின்றோம்.

செப்டம்பர் 21ஆம் திகதி நாங்கள் வெல்ல வேண்டும். தெற்கிலே வாழுகின்ற மக்களுடைய நம்பிக்கை மட்டுமல்ல, கிழக்கிலே வாழுகின்ற உங்களுடைய நம்பிக்கையும் எங்களுக்குத் தேவைப்படுகின்றது. நீங்கள் அதற்குத் தயாரா? இலங்கையில் முதல் முறையாக நாங்கள் ஏற்படுத்துவோம். தெற்கு மக்களாக இருந்தாலும், கிழக்கு மக்களாக இருந்தாலும், வடக்கு மக்களாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசாங்கம் ஒன்றை சிங்கள, தமிழ், முஸ்லிம் எல்லா மக்களினதும் நம்பிக்கையை வென்ற ஓர் அரசாங்கமாக நாங்கள் ஏற்படுத்தப் போகின்றோம்.

உங்களுக்கு தெரியும் இங்கே ஏற்கனவே அரசியல் கட்சிகள் வருவது சஜித் வருவது ஹக்கீமை தோலில் வைத்துக் கொண்டு. ரணில் வருவது அதாவுல்லாஹ்வை தோலில் வைத்துக் கொண்டு. நாங்கள் வருவது பொதுமக்களே உங்களது நம்பிக்கையை தோலில் வைத்துக் கொண்டு. இவ்வாறான ஒற்றுமையான செயற்பாடு ஆரம்பித்து இருக்கின்றது. தமிழ் மக்கள்,சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு கட்சி. தலைவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சி அல்ல. பொதுமக்களாகச் சேர்ந்த ஒரு செயற்றிட்டம். இதுதான் தேசிய மக்கள் சக்தி. இந்த இடத்திலே ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் இருக்கின்றீர்கள். இதில் சகோதரிகள் இருக்கிறார்கள். சகோதரர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து என்ன சொல்கின்றீர்கள்? நாங்கள் தயார். உங்களது நம்பிக்கையை வெற்றி கொள்வதற்காக. அப்படித்தானே?

நான் உங்களுக்கு ஓர் உறுதிமொழி வழங்குகின்றேன். நீங்கள் என் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை ஆகக் குறைந்தது ஒரு சிறு துளியாவது உடைக்க மாட்டோம். அதனைப் பாதுகாப்போம்.

உங்களுக்குத் தெரியும். 2015 இல் மஹிந்த ராஜபக்ச தோல்வி அடைந்தார். அவர்கள் மீண்டும் தங்களது அரசியலுக்குள் வருவதற்காக ஒரு வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மீண்டும் களவை பிடிக்க மாட்டோம் என்று. மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. ஜனநாயகத்தை நாங்கள் உருவாக்கப் போகிறோம் என்று 2015க்குப் பின்னர் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. 2018 க்கு பின்னர் நாட்டு மக்களின் பிரச்சினையை தீர்க்க போகிறோம் என்று அவர்கள் ஆட்சியைப் பிடிக்க முடியாது.

ஆகையினால் அவர்கள் தங்களுக்குள்ளே ஒரு வரைபடத்தை வரைந்தார்கள். அந்த வரைபடம் தான் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதம் ஒன்றைக் கிளப்பி விட்டார்கள். – என்றார்.

Sapumal
Since 1977

SAPUMAL INDUSTRIES (PVT) LTD.
P.O. Box - 20, Mawanella, Sri Lanka. ☎ +94 35 2246642 / 2246501 Hotline: +94717 333 444
www.sapumal.com info@sapumal.com /sapumalsrilanka
ISO 9001:2015 | ISO 14001:2015 CERTIFIED COMPANY
Incense Sticks | Incense Powder | Wax Matches | Candles | Air Fresheners | Roll-On Perfumes

INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS
DIPLOMA PROGRAMS
TVEC REGISTERED INSTITUTE
- Counseling & Psychology
- Teacher Training
- Business Management
- Spoken English
- AMI Montessori
- Child Psychology
- IT Programs

CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907

Awarded By:
INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
www.ipauk.org.uk
HND (UK) PROGRAMS
- HND (UK) in Business Management
- HND (UK) in Computing
- HND (UK) in Teacher Training
- HND (UK) in Psychology
- HND (UK) in English

CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032

TOP UP DEGREE PROGRAMS
UGC APPROVED
- Bachelors in Psychology
- Bachelor of Education
- BBA / MBA
- BA in English
- BSC IT

CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032

AMAZON COLLEGE
Where Success Begins
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 SEPTEMBER 17 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

இன நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவது காலத்தின் தேவையாகும்

மீலாத் தினத்தில் உறுதி பூணுவோம்

உலகவாழ் முஸ்லிம்கள் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறந்த தினமான ரபிய்யுல் அவ்வல் மாதத்தினை அனுஷ்டித்து வருகின்றனர். இறைத்தூதர் பிறந்ததும் அவர் இவ்வுலகை விட்டு பிரிந்ததும் இந்த மாதத்திலேயே என்பதால் இது இன்னும் சிறப்புக்குரியதாகிறது. மனித நேயம், சகோதரத்துவம், மற்றும் பிற சமூகத்தவருடன் இணக்கமாக வாழ்வதற்கு முன்மாதிரியாக திகழ்ந்த தலைவரான நம் நபியின் போதனைகள் எக்காலத்துக்கும் பொருத்தமானதாகும். உலகில் இன்று மிக அதிகமாக விவாதிக்கப்படும் கொள்கையாக இஸ்லாம் விளங்குகிறது. இஸ்லாத்தின் சிறப்புக்கள் முஸ்லிமல்லாத நாடுகளில் இன்று பரவலாக பேசப்படுகிறது. ஜப்பான் உட்பட மேற்கத்தேய நாடுகளில் முஸ்லிமல்லாதவர்கள் இஸ்லாத்தை பற்றி அறிய ஆர்வம் காட்டும் அதேவேளை பல நாடுகளில் இஸ்லாத்தை நாடி வருவதையும் ஊடகங்களினூடு அறியமுடிகிறது. இஸ்லாத்தைப் பற்றிய தவறான கருத்துக்கள் பரப்பப்படுவதையும் எம்மால் அவதானிக்க கூடியதாயுள்ளது.

தங்களை இஸ்லாமிய அடிப்படையில் நடப்பவர்கள் என அடையாளப்படுத்திக் கொள்ளும் சில குழுக்களின் செயற்பாடுகள் இஸ்லாத்தைப்பற்றிய தவறான புரிதலை உண்டு பண்ணுகிறன. சில முஸ்லிம்களின் நடை உடை பாவனை மற்றும் பழக்கவழக்கங்கள் இஸ்லாம் பற்றிய சந்தேகங்களை மாற்றுமதத்தினரிடம் ஏற்படுத்திவிடுகின்றன. முஸ்லிமல்லாதவர்களுடன் கண்ணியமாக நடந்து கொள்ளுமாறு முஸ்லிம்களுக்கு இஸ்லாம் போதிக்கிறது. இதற்கு இறைத்தூதரின் வாழ்வில் எத்தனையோ முன்மாதிரிகள் உள்ளன. இதன் அமுல்படுத்தலின் விளைவு பல முஸ்லிம் நாடுகளில் மாற்றுமதத்தினர் தமது மத அனுஷ்டானங்களை பினபற்றுவதற்கு அந்நாட்டு அரசாங்கத்தினால் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளமையாகும்.

தனிநபர் ஒழுக்கங்கள், தனிநபர் மீதான சமூகப்பொறுப்புக்கள் மற்றும் விழுமியங்கள், இஸ்லாமிய அரசியல் ரீதியான சமத்துவம் என இறைத்தூதர் வாழ்வில் மிகத்தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டல்களை மாற்றுமத சகோதர சமூகத்தினரிடம் எடுத்துக்காட்டுவதற்கு இந்த ரபிய்யுல் அவ்வல் மாதத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் நடாத்தும் மீலாத் விழாக்கள், வைபவங்களை காரணமாகக் கொண்டு நபிகளார் காட்டித்தந்த இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது காலத்தின் தேவையாக உணரப்படுகிறது.

ரஹ்மத் மன்சூரினால் ஒலுவில்,சம்மாந்துறை, நெயினாகாடு பிரதேசங்களில் நீர் இணைப்பு மற்றும் பொதுக்கிணறு திறந்து வைப்பு!

(எம்.என்.எம்.அப்ராஸ்)

ரஹ்மத் மன்சூரினால் அம்பாரை மாவட்டம் ஒலுவில், சம்மாந்துறை,நெயினாகாடு பிரதேசங்களில் நீர் இணைப்பு மற்றும் பொதுக்கிணறு திறந்து வைக்கப்பட்டது. ஒலுவில், நெயினாகாடு,சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் தேவையுடைய பயனாளிகள் நீர் இணைப்பு மற்றும் பொதுக்கிணறு என்பனவற்றை அமைத்துத்தருமாறு கல்முனை ரஹ்மத் பவுண்டேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறித்த கோரிக்கைக்கு அமைய வை.டப்ளியு.எம்.ஏ.பேரவையின் ஒருங்கிணைப்பில்,ரஹ்மத் பவுண்டேசனினால் குறுகிய நாட்களுக்குள் நீர் இணைப்பு பொதுக்கிணறுகள் அமைக்கப்பட்ட நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ,கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரினால் பொதுக்கிணறுகள் மற்றும் நீர் இணைப்பு என்பன பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டு திறந்து வைத்தார்.

இதுஇதன்போது பயனாளிகள் பிரதேச முக்கியஸ்தர்கள், நலன்விரும்பிகள், பவுண்டேசன் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதசவுக்கு ஆதரவு தெரிவித்து கல்முனை தொகுதியில் வீட்டுக்கு வீடு பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி பொருளாளரும், உயர் பீட உறுப்பினருமான ஏ.சீ.எஹியாகான் தலைமையிலான குழுவினர் இப்பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(படங்கள் – எம். எப். றிபாஸ்)

iKING
be the best version of U!!!
iKING Holdings (Pvt) Ltd
Kingdom of Casual Shirts
Sales Department: +94 74 055 2220
No 120, Pagoda Road, Pitta Kotte - 10100.
www.iking.clothing
: ikingclothing

அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

தானமும், கடனும்

நிச்சயமாக தானம் செய்யும் ஆண்களிலோ, பெண்கிளிலோ எவர்கள் அல்லாஹ்வுக்காகப் (பிறருக்குப் பொருளை) அழகிய கடனாகக் கொடுக்கின்றார்களோ அவர்களுக்கு அது இருமடங்காக்கப்படுகின்றது. பின்னும் அவர்களுக்கு கண்ணியமான பிரதிபலனும் உண்டு" (57:18)

"எவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் (மெய்யாகவே) விசுவாசிக்கின்றார்களோ, அத்தலையோர்தாம் தங்கள் இறைவனின் சந்நிதியில் சித்தீக்கள்களாகிய (உண்மையானவர்களாக) /ஹுதாக்களாக (தியாகிகளாக) இருப்பார்கள். (அன்றி) அவர்களுக்கு அவர்களுடைய கூலியும் உண்டு. அவர்களுக்கு (நேரான வழியை அறிவிக்கக் கூடிய) பிரகாசமும் உண்டு. எவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும்) நிராகரித்து நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றார்களோ அவர்கள் நரகவாசிகள்தாம்." (57:19)

சொற்ப இன்பம்

"(மனிதர்களே) நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கையெல்லாம் வீண் விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமும்தான். (அன்றி) அது உங்களுக்கிடையில் வீண் பொறாமையை ஏற்படுத்துவதாகவும், பொருள்களிலும், சந்ததிகளிலும் போட்டியேற்படுத்துவதாகவும் (இருக்கிறது. இதன் உதாரணமாவது ஒரு மழையின் உதாரணத்தை ஒத்திருக்கின்றது. (அதன் உதவியில் முளைத்த) பயிர்கள் (நன்கு வளர்ந்து) விவசாயிக்கு களிப்பை உண்டுபண்ணிக் கொண்டிருந்தன. அது காய்ந்த பின்னர் மஞ்சளித்து விடுவதை நீர் காண்கிறீர். பின்னர் அது சருகுகளாகிவிடுகின்றது. (இவ்வுலக வாழ்க்கையும் அவ்வாறே இருக்கின்றது.) ஆகவே இவ்வுலக வாழ்க்கை (மனிதனை) மயக்கும் சொற்ப இன்பமேயன்றி வேறன்று" (57:20)

சொல்லும் செயலும்

"விசுவாசிகளே நீங்கள் செய்யாத காரியங்களைச் செய்ததாகவோ, பிறர் செய்யுமாறோ) ஏன் கூறுகின்றீர்கள்? நீங்கள் செய்யாததை (ச் செய்ததாக)க் கூறுவது அல்லாஹ்விடத்தில் மிக்க வெறுக்கத்தக்கதாக இருக்கின்றது." (61:2,3)

"விசுவாசிகளே ஒரு வியாபாரத்தை நான் உங்களுக்கு அறிவிக்கவா? (அது) துன்புறுத்தும் வேதனையிலிருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ளும்." (61:10)

""(அதாவது) அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் விசுவாசித்து, உங்களுடைய பொருள்களையும், உங்களுடைய உயிர்களையும் தியாகம் செய்து அல்லாஹ்வுடைய பாதையில் போரிடுங்கள். நீங்கள் அறிவுடையோர்களானால் இதுவே உங்களுக்கு மிக்க மேலானதாக இருக்கும் (என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்) (61:11)

ஜுமுஆ தினத்தில்..

"விசுவாசிகளே (வெள்ளிக்கிழமையாகிய) ஜுமுஆ தினத்தன்று தொழுகைக்காக (பாங்கு சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால் வர்த்தகத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வைத் தியானிக்க நீங்கள் விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிவுடையோர்களாயிருந்தால் இதுவே உங்களுக்கு மிக்க நன்று. (என்பதை அறிந்து கொள்வீர்களாக!)" (62:09)

"" (ஜ/முஆ) தொழுகை முடிவு பெற்றால் (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு) பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள். நீங்கள் சித்தியடையும் பொருட்டு அடிக்கடி அல்லாஹ்வை நினைவு கூருங்கள்."
(62:10)

""அல்லாஹ்விடத்தில் இருப்பது இந்த வர்த்தகத்தையும், வேடிக்கையையும் விட மேலானதாகும். அன்றி ஆகாரமளிப்போரிலும் அல்லாஹ் மிக்க மேலானவன்" (62:11)

இரகசியம் பேசுதல்

"விசுவாசிகளே! உங்களுக்குள் நீங்கள் இரகசியம் பேசினால் பாவம் செய்வதற்காகவும் வரம்பு மீறுவதற்காகவும் (நம்முடைய) தூதருக்கு மாறு செய்வதற்காகவும் இரகசியம் பேசாதீர்கள். பரிசுத்தத் தன்மைக்காக இரகசியம் பேசலாம். (யாவையும்) அறிந்த அல்லாஹ்வையே அஞ்சுங்கள். அவனிடமே நீங்கள் ஒன்று சேர்க்கப்படுவீர்கள்." 02 (58:9)

தொழுகையைக் கடைப்பிடித்து ஸக்காத்தும் கொடுத்து அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் (உண்மையாகவே) வழிப்பட்டு நடந்து கொள்ளுங்கள். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கின்றான்." (58:13)

இழிவுக்குள்ளாவோர்

"எவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் மெய்யாக எதிர்க்கின்றார்களோ அவர்களே இழிவுக்குள்ளாவர்கள். தாமும் தம்முடைய தூதர்களுமே ஜெயிப்பார்களென்று அல்லாஹ் விதித்துவிட்டான். நிச்சயமாக அல்லாஹ் பலவானாகவும் (யாவரையும்) மிகைத்தோனாகவும் இருக்கின்றான்." (58:20,21)

அல்லாஹ்வின் கூட்டத்தினர் யார்

"(நபியே) எந்த ஜனங்கள் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் (மெய்யாகவே) விசவாசம் கொண்டிருக்கின்றார்களோ அவர்கள், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்பவர்களாக இருப்பவர்களை (நேசிக்க மாட்டார்கள்) அவர்கள் தங்கள் மூதாதையர்களாக இருந்த போதிலும் அல்லது தங்களுடைய சந்ததிகளாக இருந்த போதிலும் – அல்லது தங்களுடைய சகோதரர்களாயிருந்த போதிலும் அல்லது தங்களுடைய பந்துக்களாயிருந்த போதிலும் அவர்களுடன் இவர்கள் உறவாடுவதை நீங்கள் காணமாட்டீர். இத்தகையோருடைய இருதயங்களில் அல்லாஹ் விசுவாசத்தைப் பதிய வைத்துத் தன்னுடைய உணர்வைக் கொண்டும் இவர்களைப் பலப்படுத்தி வைத்திருக்கின்றான். சதா நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும் சுவனபதிகளிலும் இவர்களைப் புகுத்தி விடுவான். அவற்றில் என்றென்றும் இவர்கள் தங்கிவிடுவார்கள். இவர்களைப் பற்றி அல்லாஹ் திருப்தியடைவான். அவர்களும் அவனைப் பற்றித் திருப்தியடைவார்கள். இவர்கள்தாம் அல்லாஹ்வின் கூட்டத்தினர். நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர்தான் சித்தியடைந்தவர்கள்" (58:22)

"விசுவாசிகளே! நீங்கள் (மெய்யாகவே) அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். ஒவ்வோர் ஆத்மாவும் (மறுமை) நாளைக்காக, தான் எதனை (ச் சேகரித்து) அனுப்பியிருக்கிறது என்பதைக் கவனித்து அல்லாஹ்வுக்குப் பயந்து (நடந்து) கொள்ளட்டும். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவைகளை நன்கறிந்தவனாக இருக்கின்றான்."(59:18) "(மனிதர்களே) நீங்கள் உங்கள் வார்த்தைகளை இரகசியமாகக் கூறுங்கள். அல்லது பரகசியமாகவே கூறுங்கள். எவ்விதம் கூறியபோதிலும் இறைவன் அதனை நன்கறிந்து கொள்வான் (ஏனென்றால்) நிச்சயமாக அவன் (மனிதர்களின்) இருதயங்களிலுள்ளவைகளையும் நன்கறிபவனாக இருக்கின்றான்." (67:13)

"நிச்சயமாக எவர்கள் மறைவிலும் தங்கள் இறைவனுக்குப் பயப்படுகிறார்களோ அவர்களுக்கு மன்னிப்பும் உண்டு பெருங் கூலியும் உண்டு." (67:12)

"நிச்சயமாக பயபக்தியுடையோருக்குத் தங்கள் இறைவனிடத்தில் மிக்க இன்பம் தரும் சுவனபதிகள் உண்டு" (68:34)

"(விசுவாசிகளான) அவர்கள் தங்கள் தொழுகையைத் தவறாது தொழுது வருவார்கள். அவர்களுடைய பொருள்களில் (ஏழைகளுக்கு) குறிப்பிட்ட பாத்தியதை உண்டு. கேட்போருக்கும் (வெட்கத்தால்) கேட்காதோருக்கும் (உண்டு) கூலிகொடுக்கும் நாளையும் அவர்கள் உண்மைப்படுத்தி வைக்கின்றனர். (இவ்வாறிருந்தும்) அவர்கள் தங்கள் இறைவனின் வேதனைக்குப் பயந்து கொண்டே இருப்பார்கள்."
(70:23,24,25,26,27)

"(ஏனென்றால்) நிச்சயமாகத் தங்களிறைவனின் வேதனை அச்சமற்றிருக்கக் கூடியதன்று. (என்பதை அவர்கள் நன்கறிவார்கள்)." (70:28)

"அவர்கள் தங்கள் மறைவிடங்களையும் (கற்புடன்) காத்துக் கொள்வார்கள்." (70:29)

"(இன்னும்) எவர்கள் தங்களிடம் (நம்பி ஒப்படைக்கப்பட்டு) இருக்கும் அமானிதப் பொருள்களையும் (தாங்கள் செய்த) வாக்குறுதிகளையும் பேணி (யோக்கியமாக நடந்து) கொள்கிறார்களோ அவர்களும் இன்னும் எவர்கள் தங்கள் சாட்சியத்திலும் (தவறிழைக்காது) உறுதியாக இருக்கிறார்களோ அவர்களும் எவர்கள் தங்கள் தொழுகையையும் கவனித்துத் தவறாது) ஒழுங்காகத் தொழுது வருகின்றார்களோ அவர்களும் ஆகிய இத்தகையோர்தாம் சுவனபதிகளில் மிக்க கண்ணியப்படுத்தப்படுவார்கள்." (70:32,33,34,35)

சித்தியடைந்தோர் யார்?

"உங்களால் இயன்ற அளவுக்கு அல்லாஹ்வுக்குப் பயந்து (அவனுக்குச்) செவிசாய்த்து வழிபட்டு நடந்து தானமும் செய்யுங்கள். (இது) உங்களுக்குத்தான் மிகவும் நன்று. எவர்கள் உலோபித் தனத்திலிருந்து தம்மை இரட்சித்துக் கொண்டார்களோ, அத்தகையோர் நிச்சயமாக சித்தியடைவார்கள்" (64:16)

"நீங்கள் அல்லாஹ்வுக்காக கடனை அழகாகக் கொடுத்தால் அதனை அவன் உங்களுக்கு இருமடங்காக்கி வைப்பதுடன் உங்(கள் குற்றங்)களையும் மன்னித்துவிடுகின்றான். அல்லாஹ் (சொற்ப) நன்றியையும் அங்கீகரிப்பவனாகவும் மிக்க சகிப்போனாகவும் இருக்கின்றான்" (64:17)

அமானா வங்கியின் சுய-வங்கிச் சேவைகள் காத்தான்குடி கடற்கரை வீதிக்கு விஸ்தரிப்பு

SELF BANKING

அமானா வங்கி தனது புதிய சுய வங்கிச் சேவை நிலையத்தை காத்தான்குடி கடற்கரை வீதிக்கு விஸ்தரித்திருந்தது. அதனூடாக அப்பகுதியைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு எந்நேரத்திலும் பணத்தை மீளப் பெறுவது, பண வைப்புகளை மேற்கொள்வது மற்றும் காசோலை வைப்புகளை மேற்கொள்வது போன்ற வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த சுய வங்கி நிலையத்தின் அங்குரார்ப்பணத்துடன், அமானா வங்கியின் நாடு முழுவதிலும் காணப்படும் அணுகும் பகுதிகள் 64 ஆக அதிகரித்துள்ளன. இதில் 33 முழு வசதிகளையும் கொண்ட கிளைகளாகவும், 31 சுய சேவை நிலையங்களாகவும் அமைந்துள்ளன. அல்-அக்ஸா மசூதி தொகுதி, கடற்கரை வீதி, புதிய காத்தான்குடி 03 எனும் பகுதியில் அமைந்துள்ள இந்த சுய வங்கி சேவை நிலையத்தினூடாக, வங்கி வசதிகள் காணப்படாத அல்லது வங்கி வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் வங்கியை அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அமானா வங்கியின் அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதிய சுய வங்கிச் சேவை நிலையத்தை வங்கியின் பிரதம இடர் அதிகாரி எம் எம் எஸ் குவைலித் அங்குரார்ப்பணம் செய்ததுடன், வங்கியின் உப தலைவர் - நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் சித்தீக் அக்பர், உள்ளூர் வியாபார பிரதிநிதிகள், உள்ளூராட்சிமன்ற அதிகாரிகள், பிரதேசவாசிகள் மற்றும் பிராந்தியத்தின் இதர பங்காளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விரிவாக்கம் தொடர்பில் வங்கியின் பிரதம இடர் அதிகாரி எம் எம் எஸ் குவைலித் கருத்துத் தெரிவிக்கையில், "காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு, மற்றுமொரு பகுதியில் எமது பிரசன்னத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். பல வருட காலமாக இப்பகுதியில் எமது உறுதியான பிரசன்னத்தை பேணி வருகின்றோம். எம்மீது காத்தான்குடி பிரதேசவாசிகள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நாம் நன்றி தெரிவிப்பதுடன், இந்த புதிய நிலையத்தினூடாக, வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்த எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐஎனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB F&g; 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான ழுசியாயஹெயசந நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கஹவை ஆதரித்து தேர்தல் பிரச்சார கிளை அங்குரார்ப்பணம் சம்மாந்துறையில் நேற்று இடம்பெற்றது. ஐ.தே.க. செயற்பாட்டாளரும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான யூசுப் லெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மஞ்சுள பெணான்டோ பங்கேற்று கிளையினை அங்குரார்ப்பணம் செய்வதை படத்தில் காணலாம். (படங்கள் – அலியார் ஜெஸீம்)

சேப்வே ட்ரவல்ஸ் உம்றா'24
10 Days PK
Group Departure: 18th July.2024
நியாய கட்டணம், நேர்த்தியான சேவை
Special Umrah PK: 425,000/-
அனுபவமுள்ள உலமாவின் வழிகாட்டல் மற்றும் சியாரா உட்பட அனைத்தும் முதற்தரம்.
மதீனாவில் 150 மீட்டர் தூரத்தில் மக்காவில் 300 மீட்டர் தூரத்தில் தங்கி அமல் செய்யும் அரிய வாய்ப்பு.
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அழையுங்கள்:
Alhaj Dr. M.R.M.Farook J.P.
0777660637
SAFEWAY
TRAVELS & TOURS (PVT) LTD.
Book Early! Seats are Limited
IATA
191/20, High Level Road, Siebel Garden
Kirulapone, Colombo -06. Tel:011 2513373

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

இரத்தம் சிந்திய ஒரு கொடூர வரலாறு!

ஒரு கொடூரமான வரலாற்றை உலகம் இது வரை சந்தித்து இருக்க வாய்ப்பே இல்லை என்பதே இரத்தம் குடித்துக் கொண்டு இருக்கும் பாலஸ்தீன வரலாறு. 2000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்த ஒரு மிகப் பெரிய தேசிய இனத்தை சொந்த மண்ணை விட்டு வெளியேற்றி உலகம் முழுவதும் அகதிகளாக மாற்றிய பிறகும் இரத்த வெறி அடங்காத கொடுமையான தாக்குதலுக்கு உள்ளாகும் பாவப்பட்ட ஒரு சமூகத்தின் இரத்தம் சிந்திய வரலாறு தான் பாலஸ்தீன வரலாறு!

உலகில் நிலையான ஓர் இடத்தை தனக்காகக் கொண்டிருக்காமல் இருந்த ஓர் இனம் யூத இனம். ஹிட்லர் முதல் ரஷ்யர்கள் வரை கணக்கில்லாமல் யூதர்களை கொன்று குவித்த வரலாற்றை நாம் படித்திருப்போம்.

இத்தனைக்கும் மத்தியில் இஸ்ரேல் ஜீவித்திருப்பதற்குக் காரணம், அது பலமான தேசம் என்பது அல்ல !

எதிரிகளை பலவீனப்படுத்தி தன்னை வலிமையாகக் காட்டிக்கொண்டதுதான்.

யூத எதிர்ப்பு என்பது ரஷ்யா, ஜெர்மனி மட்டுமின்றி ஐரோப்பாவின் அனைத்து நாடுகளிலும் எல்லா காலங்களிலும் இருந்து வந்துள்ளது.இன்றைக்கும் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே யூதர்களின் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்பட்டு அவர்கள் பலமுறை தங்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படும் சூழ்நிலையைப் பார்க்கிறோம். எகிப்தியர்கள், அசிரியர்கள், பாபிலோனியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள் என்று வரலாறு நெடுகிலும் ஒன்றிலிருந்து இன்னொன்றாக பல்வேறு பேரரசுகளின் ஆளுகையின் கீழ் அலைக்கழிக்கப்படுகிறார்கள். ஏன் இப்படி யூதர்களை எதிர்க்க வேண்டும் என நீங்கள் யோசிக்கலாம். காரணம், வரலாற்றின் ஒரு சில காலகட்டங்களில் யூத மேல்தட்டு வர்கத்தினரின் ஆக்கிரமிப்பு எண்ணமும், அதற்காக அவர்கள் செய்த சூழ்ச்சிகளும்தான். அரசுகளுக்கு யூதர்கள் மிகப் பெரிய அளவில் ஆன துரோகத்தை இழைத்து விட்டார்கள்.

இரண்டாம் உலகப்போர் முடிந்திருந்த நேரம். யூதர்களுக்காக ‘இஸ்ரேல்’ என்ற நாட்டை உருவாக்க அமெரிக்கா முடிவு செய்தது.

‘ஹிட்லரால் கொடுமைப்படுத்தப்பட்டு சின்னாபின்னமானவர்கள் யூதர்கள். பாவம். அவர்கள் நாடில்லாதவர்கள். அவர்களுக்கு என்று ஒரு நாடு வேண்டாமா?’ என்று யூதர்களுக்காக ஒரு நாட்டை அமைக்கும் முயற்சி நடந்தது. இந்த கொடூரமான தந்திரோபாய நடவடிக்கைகள் தான் இன்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட காரணமாக அமைந்து விட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது

‘மேற்கு ஆசியாவின் பாலஸ்தீனப் பகுதிதான் யூதர்களின் தாயகப் பகுதி. எனவே பாலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியேற்றி புதிய நாட்டை உருவாக்குவோம்’ என இந்த முயற்சிகள் தொடங்கின.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இருந்தே பாலஸ்தீனத்தில் பிலிஸ்தியர் என்ற இனம் வாழ்ந்து வந்திருக்கிறது. அவர்கள் வேறு யாருமில்லை. பாலஸ்தீனர்கள்தான்.

அமெரிக்காவைப் போலவே இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்க ஆர்வம் காட்டிய இன்னொரு நாடு இங்கிலாந்து. காரணம், பாலஸ்தீனம் அப்போது இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இஸ்ரேல் என்ற நாட்டை அங்கே உருவாக்கினால் பிரான்ஸ் நாட்டின் செல்வாக்கை அந்தப் பகுதியில் இல்லாமல் ஆக்கிவிடலாம் என்று இங்கிலாந்து கணக்குப் போட்டது.

இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்க அமெரிக்காவும், இங்கிலாந்தும் இவ்வளவு ஆர்வம் காட்டியதற்கு இன்னொரு வேடிக்கையான காரணமும் இருந்தது.

எகிப்தின் செங்கடல் பகுதியில் இருந்த சூயஸ் கால்வாயைப் பாதுகாக்க இந்த இரு நாடுகளுக்கும் ஒரு இரவுநேர காவலாளி தேவைப்பட்டார்.

அப்படி ‘நைட் வாட்ச்மேனாக’ நம்ம ஆள் ஒருவர் அந்தப் பகுதியில் இருந்தால் நன்றாக இருக்குமே என்பதற்காக, இஸ்ரேல் நாட்டை உருவாக்க அமெரிக்காவும், இங்கிலாந்தும் அளப்பரிய ஆர்வம் காட்டின.

1947ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அரபு மக்களின் எண்ணிக்கை 13 லட்சம். அதே காலகட்டத்தில் அங்கு வாழ்ந்த யூதர்களின் எண்ணிக்கை வெறும் 6 லட்சம் தான். பாலஸ்தீனத்தின் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் வெறும் 7 விழுக்காடுதான் யூதர்களுக்குச் சொந்தமாக இருந்தது.

பாலஸ்தீனம் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டுப் பகுதியாக அறிவிக்கப்பட்டபோது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக ஜெருசலேம் நகரில் ஒரே ஒரு யூத குடும்பம்தான் குடியிருந்தது.

இப்போது புதிதாக உருவாகப்போகும் இஸ்ரேல் நாட்டுக்காக உலகம் முழுவதும் இருந்து யூதர்களை இறக்குமதி செய்யும் வேலையை அப்போது தான் தந்திரமாக தொடங்கப்பட்டது . (பாலஸ்தீனர்கள்) பத்து காசுக்குக் கூட பயனில்லாதவர்கள். அவர்கள் இருந்தும் ‘இல்லாத’ மக்கள். ஆகவே பாலஸ்தீனத்தை மக்கள் இல்லாத நாடாக்க வேண்டும். .அதை நாடில்லாத மக்களுக்கு (அதாவது யூதர்களுக்கு) தர வேண்டும்’ என்பது பெரியவர் பென் குரியன் உதிர்த்த மணிமொழி.

இஸ்ரேல் நாட்டின் இரண்டாவது பிரதமராக மாற இருந்த கோல்டா மேயர் என்ற அம்மையாரோ, ‘பாலஸ்தீனிய மக்கள் என்று யாரும் இல்லை. அவர்கள் தனிநாடு பெறத் தகுதியில்லாதவர்கள்’ என்று பேசினார்.

இஸ்ரேல் உருவாக இருந்த காலகட்டத்தில் இர்குன், லெகி என்ற பெயர்களில் இயங்கிய யூத தீவிரவாத இயக்கங்கள், ஜெருசலேம் நகரில் அடிக்கடி புகுந்து தங்கள் கைவரிசையைக் காட்டி வந்தன. பின்னாளில் இஸ்ரேலின் மற்றொரு பிரதமராக மாறிய மெனாகெம் பெகின் கூட, இர்குன் தீவிரவாத அமைப்பின் முன்னாள் உறுப்பினர்தான்.

இப்போது யார் யாரையோ பயங்கரவாதிகள் என்று இந்த உலகம், முத்திரை குத்தி வைத்திருக்கிறது அல்லவா? இந்த பயங்கரவாதத்துக்கு உலகில் முதன்முதலில் விதை தூவியவர்கள் இந்த யூத தீவிரவாதிகள்தான்.

1946 செப்டம்பர் மாதம், ஜெருசலேம் நகரில் உள்ள கிங் டேவிட் ஓட்டலுக்கு இந்த யூத தீவிரவாதிகள் குண்டுவைத்ததில் 91 பேர் பலியானார்கள். அவர்களில் 41 பேர் அரபுகள், 28 பேர் இங்கிலாந்துகாரர்கள், 17 பேர் யூதர்கள்.

பன்னாட்டு மன்றமான ஐ.நா., பாலஸ்தீனத்தைப் பங்கு பிரிக்கும்போது, எங்கே ஜெருசலேம் நகரத்தையும், நெகேவ் பாலைவனப்பகுதியையும் ஜோர்டான் நாட்டுக்குத் தாரை வார்த்து விடுமோ, நமக்கு வெறும் மேற்கு கலிலேயா பகுதிதான் மிஞ்சுமோ என்ற பயம் யூத தீவிர வாதிகளுக்கு ஏற்பட்டு விட்டது.

இதனால், பன்னாட்டு மன்றத்தின் இடைநடுவராக இருந்த ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த போல்க் பெர்னதத் என்ற அதிகாரியை ஜெருசலேம் நகரில் வைத்து ஒரு யூத தீவிரவாத இயக்கம் சுட்டுக் கொன்றது.

இப்படி குண்டுவைப்பதும், சுட்டுக்கொல்வதும் பயங்கரவாதம் இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆமாங்க. மற்றவர்கள் இப்படிச் செய்தால் அவர்கள் பயங்கரவாதிகள். யூதர்கள் செய்தால் அவர்கள் தேசப் பக்தர்கள், விடுதலை விரும்பிகள்.

1948ஆம் ஆண்டு, மே 15ஆம்தேதி இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டதாக பிரகடனம் செய்யப்பட்டது. இஸ்ரேல் உருவானபோது, ‘நான் கடவுள் நம்பிக்கை இல்லாதவன். ஆனால் இந்த நாடு எங்களுக்குக் கடவுள் தந்தது’ என்று டேவிட் பென்குரியன் திருவாய் மொழிந்தார்.

இஸ்ரேல் நாடு உருவான இரண்டொரு வாரங்களில் அண்டை அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் போர் வெடித்து விட்டது.

இஸ்ரேல் நாடு உருவாவதற்கு முன்பே யூத தலைர்கள் பலர் ‘அகண்ட இஸ்ரேல்’ என்று ஒரு கனவுத்திட்டத்தை கைக்குள் வைத்திருந்தார்கள். அதாவது எவ்வளவு முடியுமோ அவ்வளவு இஸ்ரேலின் எல்லைகளை விரிவுபடுத்த வேண்டும் என்பதுதான் அகண்ட இஸ்ரேல் திட்டம்.

எடுத்துக்காட்டாக மாக்ஸ் நோர்ட்டோ என்ற யூத தலைவர் எழுதிவைத்திருந்த தகவலை இங்கே சொல்லி விடுவோம்.

‘பாலஸ்தீனத்துக்குப் போய் அங்கே நமது எல்லைகளை யூப்ரடிஸ் நதி வரை விரிவுபடுத்துவோம்’ என்பதுதான் அவர் எழுதிவைத்த வாசகம். ஒரு வாசகமானாலும் திருவாசகம்.

யூப்ரடிஸ் ஆறு, இராக் நாட்டில் ஓடுகிறது. அதாவது இராக் நாடு வரை இஸ்ரேலை விரிவுபடுத்த வேண்டும் என்பதே யூதர்களின் திட்டம் என்பதை வரலாறு கூறுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வந்த போதிலும் கிறித்தவ சமயத்தைப் பின்பற்றி வந்த ஐரோப்பியர்கள் யூதர்களை ஏற்றுக் கொள்ள முன்வராத நிலையில் பிரித்தானிய மற்றும் அமெரிக்க அரசுகளின் நீண்ட கால சதியின் காரணமாக தான் அவர்கள் இன்று திட்டமிட்டு அரபு பகுதியில் குடியமர்த்தப்பட்டனர்.

யூத மதம், இஸ்லாம் மற்றும் கிறித்துவம் ஆகியவற்றில் புனித பூமியை உள்ளடக்கிய மத்திய கிழக்கின் ஒரு பகுதியான பாலஸ்தீனத்திற்கு யூதர்கள் மற்றும் அரேபியர்களின் முரண்பாடான கூற்றுக்கள் போர்களுக்கு ஒரு முக்கிய காரணமாகும் . முதலாம் உலகப் போருக்குப் பிறகு, பிரித்தானியாவின் முழுமையான கட்டுப்பாட்டில் கீழ் பாலஸ்தீனம் வந்தது.

மேலும் 1923 முதல் 1948 வரை லீக் ஆஃப் நேஷன்ஸ் ஆணையின் கீழ் அது பிராந்தியத்தை நிர்வகித்தது . அப்பகுதியில் வசிப்பவர்களில் பெரும்பாலோர் பாலஸ்தீனியர்கள் என்று அழைக்கப்படும் அரேபியர்கள். இந்த காலகட்டத்தில், ஏராளமான யூதர்கள் இப்பகுதிக்கு குடிபெயர்ந்தனர் அல்லது திட்டமிட்டு குடியமர்த்தப்படாடனர்.இதன் பின்னர் தான் பலர் படுகொலைகள் அரங்கேற்றம் செய்யப்பட்டது. புலம்பெயர்ந்தவர்களில் பலர் பாலஸ்தீனத்தில் யூத தாயகத்தை உருவாக்க விரும்பினர், அதை பாலஸ்தீனிய அரேபியர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

1875-ம் ஆண்டில் ஜியோனிஸ சித்தாந்தத்தை உருவாக்கிய தியோடர் ஹெஸில் (வுாநழனழச உநசணட) யூதர்களுக்கு ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்று திட்டமிட்டார். இதற்கான முதலாவது மாநாடு 1897 ஆகஸ்ட் மாதம் சுவிட்சர்லாந்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில்தான் பாலஸ்தீனத்தில் யூதர்களை குடியமர்த்தவும் அதற்காக தனிநாடு அமைக்கவும் முடிவு செய்தார்கள்.

அதன் பின், 1901ல் துருக்கி சென்ற தியோடர் ஹெஸில், உதுமானிய பேரரசின் தலைவராக இருந்த இரண்டாம் அப்துல் ஹமீத் கானிடம், பாலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியமர்த்தவும் அதற்கு சன்மானமாக 150 மில்லியன் பவுண்டுகளை தருவதாகவும் கேட்க, அதை முற்றிலும் மறுத்துவிட்டார் ஹமீத் கான்.

முதலாம் உலகப் போர் முடிவுக்கு வரும் சமயத்தில் உதுமானிய சாம்ராஜ்ஜியம் வீழ்ந்து பாலஸ்தீனப் பகுதி பிரிட்டனின் ஆட்சியின்கீழ் வந்தது. அப்போது பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளராக இருந்த ஆர்தர் பால்ஃபர், பிரிட்டன் யூதர்களின் பிரதிநிதிகளில் ஒருவராக இருந்த வால்டர் ராத்ஷில்ட் என்பவருக்கு 1917 நவம்பர் 2-ல் ஒரு கடிதம் எழுதுகிறார்.

அதில், ”பாலஸ்தீனத்தில் யூதர்களுக்குத் தாய்நாட்டை உருவாக்கித் தர வேண்டும் என்கிற ஜியோனிஸ சித்தாந்தத்தின் கோரிக்கைக்கு பிரிட்டன் அரசு ஒப்புதல் அளிக்கிறது. இந்த லட்சியத்தை அடைவதற்கான அனைத்து உதவிகளையும் பிரிட்டன் செய்து கொடுக்கும் என்பதில் உறுதியுடன் இருக்கிறது இதுவே, பிரிட்டன் அரசின் பாலஸ்தீனத்துக்கான கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரிட்டன் படை பாலஸ்தீனத்தை நோக்கி புறப்பட்டது. 1917 டிசம்பர் 11 அன்று ஜாபா கேட் வழியாக ஜெரூஸலத்தில் நுழைந்த பிரிட்டன் ஜெனரல் எட்மண்ட் ஆலன்பீ இன்றுடன் சிலுவையுத்தம் முடிவுக்கு வருகிறது என குறிப்பிட்டார். பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு தனிநாடு என்ற பிரிட்டனின் திட்டத்துக்கு சர்வதேச நாடுகளின் கூட்டமைப்பும் 1922-ல் ஒப்புதல் வழங்க ஐரோப்பிய நாடுகளில் இருந்த யூதர்களில் 90 ஆயிரம் பேர் பாலஸ்தீனத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே குடியமர்த்தப்படுகிறார்கள்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை பாலஸ்தீனத்தை மூன்றாகப்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

இரத்தம்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்து அரபு நாடு, யூத நாடு, ஜெருஸலம் தனி என 1947 நவம்பர் 29-ல் அறிவித்தது. இதன்படி பாலஸ்தீனில் 70 சதவிகிதம் உள்ள முஸ்லிம்களுக்கு 43 சதவிகித இடமும், 30 சதவிகிதம் உள்ள யூதர்களுக்கு 56 சதவிகிதம் இடமும் சொந்தம் என நியாயமற்ற வகையில் பிரித்தது.

1948 வரை பாலஸ்தீனம் பிரிட்டன் கட்டுப்பாட்டில் இருந்தது. 1948-ம் ஆண்டு மே 14-ம் தேதி பிரிட்டன் அதிகாரபூர்வமாக பாலஸ்தீனிலிருந்து வெளியேறியது. இஸ்ரேல் என்கிற தேசம் உருவாகிவிட்டதாக ஜியோனிஸ்ட்கள் அறிவித்துவிட்டார்கள். ஆம், ஒரு தனிநாடாக இஸ்ரேல் உருவாகி விட்டது.

1948-ல் இந்த பிரச்னையை தீர்க்க முடியாத பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். அதன்பின்னர் 1948-ம் ஆண்டு மே மாதம் 14-ம் தேதி

யூத தலைவர்கள் இஸ்ரேல் எனும் தனி நாடு தோற்றுவிக்கப்பட்டதாக அறிவித்தனர். அதே தினத்தில் இஸ்ரேலை தனி நாடாக அமெரிக்க அதிபர் ஹேறி ட்ரூமேன் அங்கீகரித்தார்.

அந்த அறிவிப்புக்கு பாலத்தீனர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மறுநாளே போர் மூண்டது. அண்டை அரபு நாடுகள் படையெடுத்தன.

இந்த போரில் மட்டும் சுமார் 7,50,000 பாலத்தீன அரபிகள் தங்களது வீட்டை விட்டும், தாயகத்தை விட்டும் தப்பி ஓடினர் அல்லது வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இதனை பாலத்தீனர்கள் ‘அல் நக்பா’ அதாவது பேரழிவு என குறிப்பிடுகின்றனர்.

இந்த போர் 1949 வரை நீடித்தது. போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டபோது இந்த பிராந்தியத்தின் பெரும்பாலான பகுதியை இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

பாலஸ்தீனத்தில் இருந்த 13 ஆயிரம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர், இந்த வரலாற்றை தான் ரத்தத்தில் ஒரு நாடு உருவானது என்று உலக அரசியல் பார்வையாளர்கள் எழுதினர். உலகில் உள்ள யூதர்கள் இஸ்ரேலுக்கு அழைத்து வரப்பட்டனர். தற்போது, உலகின் யூதர்களில் சுமார் 50மூ பேர் இஸ்ரேலில்தான் வாழ்கின்றனர்

இரண்டாம் உலகப்போரில் யூதர்கள் அடைந்த துன்பம், அவர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகளின் பங்களிப்பு என காலச்சூழல் இஸ்ரேல் என்ற தேசம் உருவாக வாய்ப்பளித்தது. பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திலிருந்து பாலஸ்தீனம் விடுதலை அடையும்போது இஸ்ரேல், பாலஸ்தீனம் என இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. அப்போது, ஐநா சபை, நாடுகளின் பிரிவை அங்கீகரித்து இஸ்ரேல் என்ற தனி நாடு உருவானது.

தங்கள் நிலத்தை இஸ்ரேலியா□கள் ஆக்கிரமித்துக் கொண்டதாக பாலஸ்தீன இஸ்லாமியர்கள் கொதிப்படைந்தனர். இறைவனால் தங்களுக்கு ஆசிர்வதிக்கப்பட்ட பூமி என இஸ்ரேலியா□கள் அதன் மீது பற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த இரு தரப்புக்கும் இடையே இன்றும் தொடரும் உரிமைப்போர் பல உயிர்களைக் குடித்துள்ளது. அதே சமயம் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டபோது இந்தப் பகுதியின் பெரும்பாலான இடங்களை இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. மேற்கு கரை பகுதியை ஜோர்டான் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்தது. எகிப்து ஆக்கிரமித்த பகுதிதான் காஸா. ஜெருசலேமும் இரண்டாகப் பிரிந்தது. மேற்கு ஜெருசலேமை இஸ்ரேலும், கிழக்கு ஜெருசலேமை ஜோர்டானும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.

1967-இல் நடந்த ஆறுநாள் போரில் ஜோர்டான், எகிப்தின் பல பகுதிகளையும் லெபனானின் சில பகுதிகளையும் இஸ்ரேல் கைப்பற்றிக்கொண்டது. போர் முடிவுக்கு வர ஜோர்டான் மற்றும் எகிப்துடன் சமாதான உடன்படிக்கைகளையும் மேற்கொண்டது. இன்றளவும் இந்தப் பகை நீடித்து வருகிறது.

அதே நேரத்தில் கிழக்கு ஜெருசலேத்தையும், மேற்கு கரையையும், சிரியாவின் கோலன் குன்றுகளின் பெரும்பான்மை பகுதியையும், காசா மற்றும் எகிப்திய சினாய் தீபகற்பத்தையும் இஸ்ரேல் ஆக்கிரமித்தது. பெரும்பாலான பாலத்தீனிய அகதிகள், அவர்களின் சந்ததியினர் காசா மற்றும் மேற்கு கரையிலும், அண்டை நாடுகளான ஜோர்டான், சிரியா மற்றும் லெபனானிலும் வசிக்கின்றனர்.

அதே சமயம் 1967 களில் பாலஸ்தீனத்தில் இருந்து சென்ற முஸ்லிம் அகதிகளோ அல்லது அவர்களின் குடும்பத்தினரோ அவர்களின் வீடுகளுக்குத் திரும்ப இஸ்ரேல் அனுமதிக்கவில்லை. அப்படி அனுமதித்தால் இஸ்ரேல் யூத நாடாக இருப்பதற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என இஸ்ரேல் அஞ்சுகிறது. இஸ்ரேல் காசாவிலிருந்து வெளியேற்றப்பட்டாலும் மேற்குக் கரையை இன்றும் ஆக்கிரமித்துள்ளது. மேற்குக் கரையை ஐநா ஓர் ஆக்கிரமிக்கப்பட்ட பிராந்தியமாகவே இன்றும் பார்க்கிறது.

இஸ்ரேல் ஜெருசலேம் முழுவதையும் தனது தலைநகர் என்று கூறுகிறது. பாலத்தீனம் கிழக்கு ஜெருசலேத்தை தனது எதிர்கால பாலத்தீனிய நாட்டின் தலைநகராக கருதுகிறது. இஸ்ரேல் முழு நகரையும் உரிமை கொண்டாடுவதை அங்கீகரித்துள்ள வெகுசில நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று. கடந்த 50 ஆண்டுகளில் இந்த பகுதிகளில் இஸ்ரேல் குடியிருப்புகளை நிறுவியது. தற்போது அங்கு 6 லட்சத்துக்கும் அதிகமான யூதர்கள் வசிக்கின்றனர்.இது சர்வதேச சட்டங்களின்படி தவறு என்றும் அமைதிக்கு தடையாக உள்ளது என்றும் பாலத்தீனம் கூறுகிறது. ஆனால் இஸ்ரேல் அதை மறுக்கிறது.

இஸ்ரேல் மொத்த ஜெருசலேமையும் தனது தலைநகர் என கூறுகிறது. அதே சமயம் பாலத்தீனம் கிழக்கு ஜெருசலேமை தனது எதிர்கால பாலத்தீன நாட்டின் தலைநகர் என கூறுகிறது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடந்த 2017-ம் ஆண்டு ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்தார். பிரிட்டன், ஜப்பான், சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் அமெரிக்க அதிபரின் முடிவுக்கு ஐநாவில் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தன.

அதே போல் அல் அக்ஸா மசூதி கிழக்கு ஜெருசலேமில் அமைந்துள்ள இது யூதர்களின் மிகவும் புனிதமான இடமாகும். மேலும் இது இஸ்லாத்தின் மூன்றாவது மிகவும் புனிதமான இடமாகவும் கருதப்படுகிறது.

யூதர்களுக்கான “டெம்பிள் மௌண்ட்“ என்றும், முஸ்லிம்களுக்கு “அல்-ஹராம் அல்-ஷரீஃப்“ என்றும் அழைக்கப்படும் இப்புனித தலத்தில் “அல்-அக்ஸா மசூதி“ மற்றும் “டோம் ஆஃப் தி ராக்“ ஆகியவையும் அடங்கும்.

“டோம் ஆஃப் தி ராக்“ யூத மதத்தில் புனிதமான தலம் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. முஹம்மது நபியுடன் தொடர்பு இருப்பதால், “டோம் ஆஃப் த ராக்“ புனித இடமாக முஸ்லிம்களும் கருதுகின்றனர். அதாவது முகம்மது ஸல் அவர்கள் இந்த பள்ளிவாசலில் இருந்து தான் விண்ணுக்கு சென்றதாக முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

இந்த புனித பள்ளிவாசலில் முஸ்லிம் அல்லாதவர்களின் பிரார்த்தனை தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த வளாகம் ஜோர்டானின் வக்ஃப் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. பாதுகாப்பு ஏற்பாடுகள் இஸ்ரேலால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

நீண்ட காலமாக இங்கு முஸ்லீம்கள் மட்டுமே பிரார்த்தனை செய்ய முடியும். மேலும், முஸ்லிம் அல்லாதவர்கள் குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் இங்கு பிரார்த்தனை செய்ய முடியாது.

இஸ்ரேல், கடந்த 50 ஆண்டுகளில் மேற்கு கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் பல குடியிருப்புகளை கட்டியது. இப்போது கிட்டதட்ட 6 லட்சத்துக்கும் அதிகமான யூதர்கள் இங்கே வாழ்கிறார்கள்.

சர்வதேச விதிகளின் படி இந்த குடியிருப்புகள் சட்டவிரோதமானவை. ஐநா பாதுகாப்பு கவுன்சில் நிலைப்பாடு இதுதான். ஆனால் இஸ்ரேல் இதனை நிராகரிக்கிறது.

மேற்கு கரையில் வசிக்கும் பாலத்தீனர்கள் இஸ்ரேல் தங்களை கொடுமைப்படுத்துவதாகவும், பணயக் கைதிகளாக வைத்திருப்பதாகவும் கூறுகிறார்கள். ஆனால், பாலத்தீனர்களின் வன்முறையில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுப்பதாக இஸ்ரேல் கூறுகிறது.

மேற்கு கரையில் குடியேறியுள்ள யூதர்களிடமிருந்து, தினமும் குறைந்தது மூன்று தாக்குதல்களையாவது பாலத்தீனர்கள் எதிர்கொள்வதாக ஐநா சமீபத்தில் தெரிவித்திருந்தது. கடந்த சில மாதங்களில் குறைந்தபட்சம் மூன்று பாலத்தீன குடும்பங்களாவது தமது நிலத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டனர்.

இஸ்ரேல், எகிப்து மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிக்கு இடையே 41 கிமீ நீளமும், 10 கிமீ அகலமும் கொண்ட சிறிய பகுதிதான் காஸா.

இதனை காஸா கரை என்றும் காஸா துண்டு நிலப்பகுதி என்றும் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இப்போது இதுதான் 23 லட்சம் பேருக்கு தாயகம். உலகிலேயே மிகக்குறைந்த நிலப்பரப்பில் அதிக மக்கள் அடர்த்தி கொண்ட பகுதிகளில் முக்கியமானது காஸா.

முதலில் எகிப்துதான் இந்த பகுதியை ஆக்கிரமித்திருந்தது. பின்னர் 1967-ல் இஸ்ரேல் கைப்பற்றியது. ஆனால் 2005ல் தனது படையினரை விலக்கிக்கொண்டது. பின்னர் தற்போதுவரை ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ளது.

காஸாவின் வான்பரப்பு மற்றும் கடற்கரை பகுதியை இஸ்ரேல் கட்டுப்படுத்துகிறது. எல்லையை தாண்டி மக்கள் செல்வதையும் பொருட் பண்டங்கள் செல்வதையும் கடும் கண்காணிப்பில் வைத்துள்ளது.

காஸாவின் 80மூ மக்கள் சர்வதேச உதவிகளை நம்பிதான் இருக்கின்றனர் என ஐநா கூறுகிறது. 10 லட்சம் பேருக்கு தினசரி உணவே உதவிகள் அடிப்படையில் வழங்கப1972-ம் -ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜெர்மனியில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. உலகத்தின் எல்லா கண்களும் ஒலிம்பிக் பக்கம் திரும்பிய சமயம், ப்ளாக் செப்டம்பர் (டீடயஉம ளுநிவநஅடிநச) என்ற அமைப்பு ஒலிம்பிக் வீரர்கள் தங்கியிருந்த பகுதிக்குள் துப்பாக்கிகளுடன் நுழைந்தது. அதுவும் இஸ்ரேலிய வீரர்கள் தங்கியிருந்த பகுதியில் நுழைந்து சிலரைக் சுட்டுக் கொன்று விட்டு, சிலரை சிறைப்பிடித்து பின்பு அவர்களையும் கொன்றது.

உலகின் எல்லா கண்களும் விளக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டு ஜெர்மனியை பார்த்தது. முன்பு இருந்தே ஜெர்மனிக்கும், யூதர்களுக்கும் ஆகாது. ஏற்கெனவே ஹிட்லரின் படை யூதர்களை கொன்று குவித்திருக்கிறது, இப்போது, இப்படி ஒரு சம்பவம். இதை நிகழ்த்திய ப்ளாக் செப்டம்பர் யார் என அலச, பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடும் ஓர் அமைப்பு எனத் தெரிய வந்தது.

துநறள ைபுநசஅயலெ

இதற்கிடையில் வீரர்கள் கொல்லப்பட்டதற்கு, நீதி வேண்டும் என்று போராடிய யூதர்களுக்கும், இறந்த விளையாட்டு வீரர்களின் குடும்பத்திற்கும், அப்போதைய இஸ்ரேல் பிரதமர் கோல்டா மெய்ர் (புழடனய ஆநசை) சொன்ன பதில் “வேட்டை தொடரும்“ என்பதே. ஆம், இந்த வேட்டைக்கு மொஸாட் என்ற அமைப்பின் உதவியை நாடியது இஸ்ரேல். 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஹோகானா எனும் ரகசிய யூத அமைப்புதான் பின்நாளில் மொஸாட்டாக மாறியது. 1929-ல் துவக்கப்பட்ட மொஸாட் எந்தக் காரியத்தையும் எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்வதற்கு இஸ்ரேல் அனுமதியளித்தது. இதனால், அப்போது உலகின் மிகப்பெரிய உளவு அமைப்பாக திகழ்ந்தது. இஸ்ரேல் வரலாற்றில் “மொஸாட்“ தனக்கென ஒரு தனி பெயரை பொறித்தது. ஆனால், தற்போது மொஸாட் வலுவிழந்துவிட்டதாகவே கருதப்படுகிறது.

1918-ம் ஆண்டு முதலாம் உலகப்போர் முடிவுக்கு வரும் சமயத்தில் துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்த ஹைஃபா நகரை மீட்க பிரிட்டன் போராடியது. அப்போது, இந்தியாவை ஆண்டுகொண்டிருந்த பிரிட்டன் அங்கு இந்திய காவல்ரி படையை (ஊயஎயடசல னுநைளைழைn) அனுப்பியது. இந்தப்படை வீரர்கள் குதிரையில் சென்று தாக்குவதில் வல்லவர்கள். மேஜர் தல்பத் சிங் (ஆயதழச னுயடியவ ளுைபொ) தலைமையில் 400 பேர் கொண்ட இந்திய படை 1918-ம் ஆண்டு செப்டம்பர் 23-ம் தேதி ஹைஃபா நகரைத் தாக்கியது. துருக்கியின் துப்பாக்கிகளை இந்திய குதிரைகள் வீழ்த்தியது. இதில் 44 இந்தியர்கள் கொல்லப்பட்டனர். இவர்கள் அப்போதைய பாலஸ்தீன பகுதிகளிலே அடக்கம் செய்யப்பட்டனர். இந்திய வீரர்களின் வீரத்தைப் பறைசாற்றும்விதமாக ஹைஃபா நகரில் போர் நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. செப்டம்பர் 23-ம் தேதி ஹைஃபா தினம் அனுசரிக்கப்படுகிறது. தற்போது ஹைஃபா நகரம் இஸ்ரேலின் ஒரு முக்கியப் பகுதியாக இருக்கிறது.

இஸ்ரேலில் 1 கோடிக்கும் குறைவான மக்கள் தான் வாழ்ந்து வருகிறார்கள். இதில் 70மூ யூதர்கள், 20மூ முஸ்லிம்கள், 2மூ கிறிஸ்தவர்கள். பாலஸ்தீன் நாட்டை முழுமையாக தன் வசம் கொண்டு வந்து விட வேண்டும் என்ற நோக்கில் தொடர் போரில் இஸ்ரேல் தற்போது ஈடுபட்டு வருகிறது. கடந்த மே மாதம் மட்டும் 200-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

பாலஸ்தீன பிஞ்சுக் குழந்தைகள் சத்தம் உலக அரங்கில் ஒலித்தது. விளையாட்டு வீரர்கள், அரசியல்வாதிகள், பிரபலங்கள், பொதுமக்கள் எனக் களத்தில் இறங்கி இஸ்ரேலுக்கெதிராக போராட ஆரம்பித்தனர். இஸ்ரேல், பாலஸ்தீனத்தை சுற்றியுள்ள முஸ்லிம் நாடுகளும் இதற்குமேல் அமைதி காக்க முடியாது என்று கருதி பாலஸ்தீனத்திற்கு பெயரளவில் ஆதரவை அளித்தனர். ஐ.நா தலையிட்டு போர் நிறுத்தத்தை அறிவித்தது.

இஸ்ரேல் என்ற நாடு உருவெடுப்பதற்கு முன்பாகவே அந்த நாட்டின் ராணுவம் உருவாகிவிட்டது என்பது ஆச்சர்யமான விஷயம். பிரிட்டிஷ் பிடிக்கு பாலஸ்தீனம் வருவதற்கு முன்பே அங்கு அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நடக்க ஆரம்பித்தன. யூதர்களின் பாதுகாப்புக்காக உயளாழஅநச என்ற அமைப்பு உருவானது. கிட்டத்தட்ட ராணுவம் போலவே இதை யூத இனத்தைச் சேர்ந்த பெரும் பணக்காரர்களும் அரசியல் செல்வாக்குள்ளவர்களும் இணைந்து நடத்தினர். இதற்கென்று தனியாக ஓர் உளவுத்துறையும் இயங்கியது.

இதேபோல முதல் உலகப்போர் காலத்தில் யூதர்களைக் கொண்டு ஞுழைெ ஆரடந ஊழசிள, துநறளைா டுநபழைெ ஆகிய துணை ராணுவ அமைப்புகளை உருவாக்கி தங்கள் ராணுவத்துடன் பயன்படுத்திக் கொண்டது பிரிட்டிஷ் அரசு. பிற்காலத்தில் அதில் இருந்தவர்களை இணைத்து உயபயயொ என்ற ராணுவத்தை யூதர்கள் உருவாக்கினர். இஸ்ரேல் தேசம் உருவானதுமே, இந்த எல்லாவற்றிலும் இருந்தவர்களை இணைத்து இஸ்ரேலிய ராணுவம் ஏற்படுத்தப்பட்டது.இந்த இராணுவம் தான் மனித குலத்தின் விழிமியங்களை முற்றிலுமாக அழித்து அப்பாவி பொதுமக்கள் குழந்தைகளை படுகொலைகள் செய்து புதிய கறுப்பு வரலாறு படைக்க முயல்கிறது என்பதே யதார்த்தமான உண்மையாகும்.....!

தமது தேவைகளுக்காக மாத்திரம் அரசியல் செய்யும் ரிசாத்தையும் ஹக்கீமையும் பற்றி ரணிலுக்கு நன்கு தெரியும்:

முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா

Ranil Wickremesin

(மாளிகைக்காடு செய்தியாளர்)

பரீட்சைக்கு யார் முன்வருவார்கள் என காத்திருந்த போது சஜித் வரவில்லை. ஜே.வி.பி பின்வாங்கியது. ரணில் விக்ரமசிங்க தைரியமாக முன்வந்தார்.

பரீட்சையில் அவர் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார். அன்று பரீட்சை எழுதாதவர்கள் இன்று நாட்டைக் கேட்கிறார்கள். இது விளையாடுகின்ற நேரமல்ல. இன்னும் 5 ஆண்டுகளுக்கு ரணில் விக்ரமசிங்கவுக்கு நாட்டை கையளிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஏனைய வேட்பாளர்கள் இப்பொழுது முன் வந்து பயனில்லை. அவர்கள் ஒரு அமைச்சுப் பதவியைக் கூட சரியாக செய்து காட்டியவர்கள் அல்லர்.

தமது தேவைகளுக்காக மாத்திரம் அரசியல் செய்யும் ரிசாதையும் ஹக்கீமையும் பற்றி ரணில் விக்ரமசிங்கவிற்கு நன்கு தெரியும் என முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் கல்முனைத் தொகுதி ஐ.தே.க அமைப்பாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் தலைமையில் நடைபெற்ற இயலும் ஸ்ரீலங்கா பிரச்சார கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர், யுத்தம், சுனாமி போன்ற அவலங்களின் பின்னர் இந்த பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. மின்சாரம் இருக்கவில்லை, பாடசாலைகள் நடைபெறவில்லை. பொருட்கள், கேஸ், எரிபொருள் இருக்கவில்லை. எதுவும் செய்வதறியாது மக்கள் வீதியில் இருந்தனர். வாழ்நாளில் அவ்வாறான அவலம் நிகழக் கூடாது என அனைவரும் பிரார்த்தித்தார்கள். நாட்டை மீட்க யார் வருவார்கள் என அவர்கள் ஏக்கத்துடன் பார்த்திருந்தார்கள்.

ஆனாலும் எமது பிரதேச முன்னேற்றத்திற்காக றிஷாத்தும், ஹக்கீமும் எதுவும் செய்யவில்லை. இந்தப் பிரதேசத்தில் தமிழர்கள், முஸ்லிங்கள், சிங்களவர், கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். ஒரு சில அரசியல்வாதிகள் இந்த ஊர்களை பிளவுபடுத்தி குரோதங்களை ஏற்படுத்தினர்.

நாட்டை செய்து காட்டியவருக்கு வாக்களிக்க வேண்டும். தமிழ் முஸ்லிம் அனைவரும் இணைந்து மேலும் 5 வருடங்களுக்கு ஜனாதிபதிக்கு நாட்டை ஒப்படைக்க தீர்மானித்து விட்டோம். 2022 இல் நடந்தது எதிர்காலத்திலும் மீள நடக்க இடமளிக்க முடியாது" என்றார்.

இந்நிகழ்வில் மகா சங்கத்தினர், சர்வ மதத் தலைவர்கள், அமைச்சர் அலி சப்ரி, ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தலைவர் அன்வர் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஆளுநர், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் அட்டாளைச்சேனையில் திறந்து வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் அட்டாளைச்சேனையில் கடந்த வெள்ளிக்கிழமை (13) திறந்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை தேசிய ஐக்கிய முன்னணியின் செயற்பாட்டாளர் றிஷாட் வஹாபின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் மனாஃப் ஷரீப், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுடீன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற தொழில் வல்லுனர்கள் மற்றும் தொழில் முனைவோருடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (11) கலந்து கொண்ட போது.

(எம்.ரீ. ஆரிப் அநுராதபுரம்)

வாக்களிப்பு நிலையங்களுக்கு தொலைபேசிகளை எடுத்துச் செல்ல வேண்டாம் :

மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை

(ஐ. ஏ. காதிர் கான்)

இந்த முறை பரபரப்பான ஜனாதிபதித் தேர்தல் என்பதால், சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுமாறு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க அனைத்து தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்படி, வாக்களிக்கும் காலப்பகுதியில், வாக்காளர் அல்லது வேட்பாளர் ஒருவர், தனது தொலைபேசியை வாக்களிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. மீறினால், அவர் குற்றவாளியாகக் கருதப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார். இவ்வாறானவர்கள் கைது செய்யப்படுவதற்கும் இடமுண்டு" என்றும் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்,

"வாக்களிப்பு நேரத்திற்குள், எந்தவொரு வாக்காளரும் அல்லது வேட்பாளரும், தமது தொலைபேசிகளுடன் வாக்குச் சாவடிக்கு செல்லக் கூடாது என்று தடை விதித்துள்ளோம். அவர்கள் அங்கே புகைப்படம் எடுப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. தபால் வாக்களிப்பின்போது, இவ்வாறு வாக்குச் சீட்டுக்களைப் புகைப்படம் எடுத்தவர்கள், தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். எனவே, யாரும் இவ்வாறு செய்யாமல் இருக்குமாறு அறிவுறுத்துகின்றேன்" என தெரிவித்தார்.

கூட்டத்தைப் பார்த்து தீர்மானிக்காதீர்கள்

மக்களிடம் கேட்கும் திலித் ஜயவீர

(ஐ. ஏ. காதிர் கான்)

"செயற்கையாக உருவாக்கப்பட்ட அரசியல் பேரணிகளைப் பார்த்து, யாரும் இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டாம்" என, 'சர்ஜவஜன அதிகார' ஜனாதிபதி வேட்பாளரும், தொழிலதிபருமான திலித் ஜயவீர மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அண்மையில் (11) 'சர்வஜன அதிகார அமைப்பின்' பல ஆசன அமைப்பாளர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர, "மாற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இவ்வேளையில், இலங்கை ஜனாதிபதித் தேர்தல் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்ததைப் போன்று, எங்களுடைய செலவினங்களைக் கட்டுப்படுத்தி இயன்றளவு பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். எனவே, நாங்கள் மக்களை ஈர்ப்பதற்காக, பஸ்ஸில் மக்களை ஏற்றிச் செல்லவோ அல்லது 'ட்ரோன்' கேமராக்களைப் பயன்படுத்தவோ இல்லை. கூட்டங்களுக்கு வரும் அனைவருமே அந்த வேட்பாளருக்குத்தான் வாக்களிப்பார்கள் என்று, யாராவது நினைப்பார்களாயின் அது முற்றிலும் தவறு. இவ்வாறான கூட்டங்களில் பங்கேற்பதற்காகவே, மக்கள் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள்தான் நாடு முழுவதும் செல்கின்றனர். எனவேதான், நான் சொல்கிறேன். இந்தக் கூட்டத்தை வைத்து மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்காதீர்கள். இறுதி ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டு வருகின்றன. மக்கள் வாக்குப் பெட்டிக்கு அருகே சென்று, தங்களது மனச்சாட்சிக்கு ஏற்ப, புத்திசாலித்தனமான முடிவை மேற்கொள்ள வேண்டும்." என்றார்.

தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு: மட்டு இந்து இளைஞர் பேரவை முடிவு

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

நம்பிக்கையை கட்டியெழுப்பவோ இயலாதிருந்திருக்கின்றோம் என்பதை பொறுப்புடன் ஏற்றுக்கொள்ளுகின்ற சந்தர்ப்பம் ஒன்றை இந்தத் தேர்தல் எங்களுக்குத் தந்திருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள பெரும்பான்மைக் கட்சிகளினாலும் சிவில் சமூக அமைப்புக்களினாலும் முன்மொழியப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஏகமனதான தீர்மானமெடுத்துள்ளது. தமிழ்ப் பொதுக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரின் சங்கு சின்னத்திற்கு வாக்களித்து தமது வரலாற்று கடமையை நிறைவேற்ற வேண்டும்" என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அழகுக்கலை நிபுணருக்கான தேசிய விருது பெற்றார் பாத்திமா நப்ரா

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

அல் ஹசீனா ப்ரைடல்ஸ் அகடமி ஏற்பாட்டில் தென்னிந்திய பிரபல நடிகை மீனா சாஹர் கலந்து கொண்ட குலோரியஸ் ஐகொனிக் தேசிய விருது வழங்கும் விழா-2024 அண்மையில்(08) கொழும்பு காலி முகத்திடலில் உள்ள கோல் பேஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இவ்விழாவில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சிறந்த அழகுக்கலை நிபுணர் மற்றும் சரும பராமரிப்பாளருக்கான தேசிய விருதினை எம்.என்.பாத்திமா நப்ரா பெற்றுக் கொண்டார். இவர் அழகு கலை மற்றும் சரும பாதுகாப்பிற்காக கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதற் பெண் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்விழாவில் முன்னூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், புகைப்படப் பிடிப்பாளர்கள், நடிகர்கள், பாடகர்கள், சிகை அலங்காரம், அழகுக்கலை நிபுணர்கள், தொலைக்காட்சி தயாரிப்பாளர், சமுக சேவையாளர்கள், சாதனையாளர்கள் என பலருக்கு தென்னிந்திய நடிகை மீனா சாஹர் விருதுகளை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

பேருவளையில் மாபெரும் மக்கள் பேரணி

(பேருவளை பீ.எம் முக்தார்)

ஜனாதிபதி வேட்பாளர் ஸஜித் பிரேமதாஸவை ஆதரித்து பேருவளையில் எதிர்வரும் 18 ஆம் திகதி மாபெரும் மக்கள் பேரணி இடம்பெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி பேருவளை பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜமீல் தலைமையில் அன்றைய தினம் பி.ப 2:00 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும்.

எதிர் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ கட்சிகளின் தலைவர்கள், களுத்துறை மாவட்டத்தின் அமைப்பாளர்கள் பலரும் இக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

நபிகள் நாயகத்தின் மனித நேயம் நற்பண்புகளை கடைப்பிடிப்போம்

மீலாத் செய்தியில் ஜனாதிபதி

முஹம்மது நபி(ஸல்) அவர்களின் பிறப்பை நினைவுகூரும் வகையில் மீலாதுன் நபி தினத்தை உலகெங்கிலும் உள்ள முஸ்லிம் சமூகத்துடன் இலங்கை முஸ்லிம்கள் சகோதரத்துவத்துடன் கொண்டாடுகின்றனர்.

மற்றவர்களிடையே நம்பிக்கையை வளர்த்த முஹம்மது நபியவர்கள், அல்-அமீன் என்று (நம்பிக்கையானவர்) அழைக்கப்பட்டார். அவர் தன் வாழ்நாள் முழுவதும் காத்து வந்த நற்பண்புகளுக்காகவும் மனித நேயத்திற்காகவும் செய்த தியாகங்கள் அளவிட முடியாதவை. பரஸ்பர புரிதல், நேர்மை, நல்லிணக்கம் மற்றும் மற்றவர்களை வெறுத்து ஒதுக்காதிருத்தல் போன்றவை இறைத்தூதர் முஹம்மது நபி அவர்களின் அடிப்படை போதனைகளின் மையக்கருவாக அமைந்திருந்தன.

நேர்மையான மனிதர்களுக்கு இறைவன் உதவி புரிகிறார் என்பதையும், அத்தகையவர்கள் இறைவனால் பொருத்தமான, உயர்ந்த இடங்களுக்கு உயர்த்தப்படுவதையும் முஹம்மது நபி அவர்களுடைய வாழ்க்கை மற்றும் தத்துவத்தைப் பற்றி ஆராய்ந்தால் புரிந்துகொள்ளலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பிறந்த நாளைக் கொண்டாடும் இத்தினத்தில் அவர்கள், எடுத்துக் காட்டிய விழுமியங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் அனைத்து வகையான அடிப்படைவாதத்தையும் முறியடித்து சிறந்த, முன்னேறிய உலகை உருவாக்குவதற்கான உறுதியுடன் உலகெங்கிலும் உள்ள முஸ்லிங்கள் கைகோர்ப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த மீலாத்துன் நபி தினம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அர்த்தமுள்ளதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமைய பிரார்த்திக்கிறேன் எனத் தெரிவித்தார்.

அர்ப்பணிப்புடன் கூடிய சமூக அமைப்பொன்றினை உருவாக்க பாடுபட்டார்

மீலாத் வாழ்த்து செய்தியில் சஜித் பிரேமதாச

மனிதநேயம் நிறைந்த கௌரவமான அன்பையும் சகோதரத்துவத்தையும் உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டவரும் உலகெங்கிலும் வாழும் இஸ்லாமியர்களின் வழிகாட்டியாகக் கருதப்படுபவருமான முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினம் இன்றாகும். அதன் பொருட்டு வாழ்த்துச் செய்தியை அனுப்புவது தொடர்பில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

எந்தவொரு சமூகத்திலும் வாழும் மனித இனத்தின் சிந்தனை மற்றும் நடத்தையின் அடிப்படையாக அமைந்திருப்பது அவர்கள் நம்பி ஏற்றுக்கொண்ட ஆழமான மத நம்பிக்கையாகும். தீய பழக்கங்கள் நிறைந்திருந்த உலகை நல்லொழுக்கமுள்ளதாக மாற்றுவதற்காக அர்ப்பணித்த ஆன்மீகத் தலைவருமாகக் கருதப்படும் அவர் உலகெங்கும் பரப்பிய போதனைகளிலிருந்து நாமும் பல விடயங்களைக் கற்றுக்கொள்ள முடியும். இனம், மதம், குலம் ஆகியவற்றைப் பாராது ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்புடன் செயல்படும் சமூகத்தை உருவாக்க அவரின் வழிகாட்டலைப் பின்பற்ற நமக்கும் வாய்ப்புள்ளது.

அவரின் போதனையைப் பின்பற்றிய அனைவரும் ஒன்றிணைந்து மீண்டும் ஒரு நாடாக எழுச்சி பெறுவதற்கான நேரம் வந்துள்ளது. அதற்காக இந்த கடினமான சூழ்நிலையில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

உலகினை நேர்வழிப்படுத்த உதவிய உன்னத தூதரின் போதனைகளை நினைவு கூறும் நாள்

மீலாத் செய்தியில் முஸ்லிம் திணைக்கள பணிப்பாளர்

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளான இந்த மீலாதுன் நபி தினமானது உலகினை நேர்வழிப்படுத்த உதவிய நபிகளாரின் போதனைகளை நினைவுகூரும் ஒரு உன்னத தருணமாகும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் போதனைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் சம உரிமை மற்றும் சமத்துவத்தினை வலியுறுத்தும் உன்னதமான கருத்தை அடிப்படையாகக் கொண்டவை. எந்தவொரு நபரும் இனம், சாதி அல்லது நிறம் காரணமாக ஒருவரை விட உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ அல்லர்.

வெறுப்பு மற்றும் மோதல்கள் நிறைந்த யுகத்தில் மனித விழுமியங்களுக்கும் மனிதநேயத்திற்கும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பங்களிப்பு உண்மையில் நம் அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்களைச் சுரண்டுவதை எதிர்த்ததுடன், அடிமைகளின் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டார்கள். தொழிலாளர்களின் வியர்வை உலர்வதற்குள் ஊதியம் வழங்க வேண்டும் என்று போதித்தது இதற்கு உதாரணம்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளான இத்தினத்தில், உலகிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் அன்பின் செய்தியை கொண்டு செல்லும் மிலாதுன் நபியின் மகத்துவம் அன்றாட வாழ்வில் நம் அனைவரையும் வழிநடத்தும் என்று நம்புகிறேன்.

இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்னல் நபியின் வழியில் ஜனநாயகத்தை காப்போம்

மீலாத் தின செய்தியில் எம்.எச். அப்துல் ஹலீம்

நாட்டில் ஜனநாயத்தை மீறி சர்வாதிகார போக்கு மேலோங்கியிருக்கிறது. இந்த சூழ்நிலையல் அன்னல் நபியின் சிறந்த ஆட்சி முறை மூலமான அழகிய வழிகாட்டல்கள் மூலம் நாம் ஜனநாயத்தை பாதுகாக்க வேண்டும் என கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச். அப்துல் ஹலீம் தெரிவித்தார்.

முன்னால் அமைச்சர் ஹலீம் விடுத்துள்ள மீலாத் தின செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அகிழத்துக்கு அருட்கொடையாய் வந்துதித்த அன்னல் நபியின் பிறந்த தினம் மற்றும் அவர்கள் இவ்வுலகை விட்டு பிறிந்த தினமும் இன்றாகும். இன்று நாடெங்கிலும் எம் பெருமானார் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் பற்றி பல்வேறுபட்ட நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அத்துடன் நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையால் அரசாங்கம் அல்லோல கல்லோலப்பட்டுக்கொண்டிருக்கிறது.

முஹம்மது நபியவர்கள் உலகின் சிறந்த தலைவராக வாழ்ந்து எமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளமையை அவரது தலைமைத்துவ வழிகாட்டல்கள் எடுத்துறைக்கின்றன. அதன்காரணமாகவே இன்று உலகம் முழுதும் இஸ்லாம் வியாபித்து சமாதானத்தை எடுத்துறைக்கிறது.

அல் குர்ஆனை யாப்பாகக்கொண்டு நாம் எமது அடிப்படை கடமைகளை நிறைவேற்றி வருகின்றறோம். அத்துதோடு முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையான சுன்னாவையும் அனுவனுவாக பின்பற்றி வருகிறோம். அதுபோல இலங்கை நாட்டில் எமது அரசியல் யாப்பின் அடிப்படையிலும் இருந்துகொள்ளவேண்டிய கடப்பாடு ஒவ்வொரு முஸ்லிம்மின் மீதும் இருக்கிறது. அதுபோன்றே அரசியல் யாப்புக்கு புரம்பாக அல்லது அதனை மதிக்காது ஜனநாயத்திற்கு விரோதமாக செயற்படுபவர்களை எதிர்ப்பதும் கட்டயமானதாகும் என தெரிவித்துள்ளார்.

நபிகள் நாயகம் போதித்த அரசியல் அமைப்பை தேர்தலில் பயன்படுத்துவோம்

மீலாத் வாழ்த்துச்செய்தியில் கலீலுர்ரஹ்மான

இலங்கையில் தேர்தல் ஒன்று நடைபெற்று வாக்களிக்க மக்கள் தயாராக இருக்கும் போது, இலங்கை முஸ்லிம்கள் மட்டுமல்ல உலக முஸ்லிம்களும் இஸ்லாமிய மத போதகரான கண்மணி நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் நபிகளார் கற்றுத் தந்த அரசியல் ஆட்சிமுறையை சிந்தித்து நமது வாக்கு செலுத்தலை தீர்மானிக்க இந்த பெருநாளில் முடிவெடுப்போம் என ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், பொருளாதார நெருக்கடியின் போது இறைவனின் உதவியால் நாம் மீண்டோம். அதற்காக பலரும் பல்வேறு முயற்சிகளை செய்தனர். மோசடி, ஊழல், ஏமாற்று ஆகியவற்றைத் தவிர்த்து, பொருளாதாரத்தை நிலைநிறுத்தவும், பராமரிக்கவும், இஸ்லாமிய போதனைகளையும், நபிகளாரின் அறிவுரைகளைப் பின்பற்றவும் நாம் திடசங்கடம் பூண்டு வரவிருக்கும் தேர்தலில் நமது செயல்பாடுகளை செய்தால், அந்த உன்னத நபியின் ஆசீர்வாதத்தை சந்தேகத்திற்கு இடமின்றி பெறுவோம்.

எனவே, முஸ்லிம் சமூகத்தில் உள்ள மத, அரசியல், சிவில் தலைவர்கள் ஒன்றிணைந்து முஸ்லிம் சமூகத்தை நபிகள் நாயகத்தின் பாதையில் நடக்கச்செய்ய வழிகாட்ட வேண்டும். என்று தெரிவித்துள்ளார்.

பல் துறை ஆளுமை மிக்க ஒரு தலைவர்

மர்ஹூம் அஷ்ரப்

யூ.கே. காலித்தீன்



அன்று ஒருநாள் 16 ஆம் திகதி சனிக்கிழமை (16.09.2000) அன்று மிகப் பெரும் துயரத்தைக் கொண்ட நாளாக விடியும் என்று எவருமே நினைத்திருக்கவில்லை. அன்று காலை 9.05 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்திலிருந்து இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று கிழக்கு நோக்கிப் பறந்து சென்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், தேசிய ஐக்கிய முன்னணியின் ஸ்தாபகரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான எம்.எச். எம் அஷ்ரப் அவர்கள் அன்று காலை இறக்காமத்தில் நடைபெறவிருந்த கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக மேலும் 14 பேருடன் அந்த ஹெலிகொப்டரில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

கொழும்பிலிருந்து 110 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அரநாயக்கப் பகுதியில் இருக்கும் “பைபில் றொக்” **(Bibil Rock)** மலைப்பகுதியின் மேலாக அந்த ஹெலிகொப்டர் பறந்து கொண்டிருந்த போது திடீர் விபத்துக்குள்ளானது. பலத்த வெடியோசையுடன் தீப்பிழம்பாக வானத்தில் வெடித்துச் சிதறியது. அமைச்சரும் அவருடன் பயணம் செய்த மேலும் 14 பேரும் அந்த விபத்தின் போது அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள். ஹெலிகொப்டர் சிதைவுகளுக்கு மத்தியிலிருந்து கருகிய நிலையிலான சடலங்கள் மீட்கப்பட்டன.

அமைச்சர் அஷ்ரபின் ஜனாஸாவை சப்ரகமுவ மாகாண சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க அடையாளம் காட்டினார். அமைச்சர் அஷ்ரப் ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கி மரணமானார் என்ற செய்தி கிழக்கு மாகாணத்தை காட்டு தீ போல் பரவிய போது மக்கள் வாய்விட்டுக் கதறினார்கள். சோகம் தாழாமல் தலையில் அடித்துப் புலம்பினார்கள். அமைச்சரை வரவேற்பதற்காக மாபெரும் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த கிழக்கு மாகாண வீதியெங்கும் துயரவெள்ளம் கரைபுரண்டது. வரலாறு காணாத சோகத்தில் கிழக்கு மாகாணம் மூழ்கிப் போனது. தனது சொந்த சகோதரனை இழந்த துயரத்தில் கிழக்கு மாகாண மக்கள் செயலிழந்து நின்றார்கள்.

மர்/ஹும் எம்,எச்.எம். அஷ்ரப் அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி சம்மாந்துறையில் முஹம்மது மீரா லெப்பை ஹூஸைன் மற்றும் மதீனா உம்மா தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வராக கல்முனையில் பிரபலமான காரியப்பர் குடும்பத்தில் பிறந்தார். 1977 ஆம் ஆண்டு எம்.எச். எம். அஷ்ரப், பேரியல் இஸ்மாயிலுடன் தனது இல்லற வாழ்வில் நுழைந்தார். சட்டக் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்திலேயே அஷ்ரப் இலங்கை அரசியலில் தீவிர ஆர்வம் கொண்டார். அஷ்ரப் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார். தந்தை செல்வநாயகத்தை தனது அரசியல் குருவாக அஷ்ரப் வகுத்துக் கொண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளில் தீவிர பங்கு கொண்ட எம்.எச்.எம். அஷ்ரப் முஸ்லிம் சமூகத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினார்.

சிறுபான்மைச் சமூகம் தனித்துவங்களை அடையாளப்படுத்தி தனது உரிமைகளுக்காக போராடாதவரை அந்த சமூகங்கள் கையேந்தி நிற்க வேண்டிய அவல நிலையை அவர் அறிந்தார். இந்த நிலையில் தான் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உதயமானது.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களை ஓரணியில் இணைப்பதற்கு பெரு முயற்சிகளை மேற்கொண்டார். முஸ்லிம்களின் தனித்துவமான குரலாக அது ஒலிக்கத் தொடங்கியது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன் முறையாக அரசியல் பிரவேசம் செய்தது. எதிர்பார்த்ததற்கு மேலாக வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிக்கு ஏகோபித்த ஆதரவை வழங்கினார்கள்.

1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன் முதலாக போட்டியிட்டது. அந்தத் தேர்தலில் நான்கு இடங்களைக் கைப்பற்றியது. எம்.எச்.எம். அஷ்ரப், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, ஏ. அபூபக்கர், என்.எம். புகார்தீன் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்களானார்கள்.

1994 ஆம் ஆண்டில் மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. அது மட்டுமன்றி அஷ்ரப் சந்திரிக்கா ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது. வடக்கு கிழக்கில் மட்டும் தம் செயற்பாடுகளை மட்டுப்படுத்தி வைத்திருந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ரீதியாக சிந்திக்கவும், செயற்படவும் தொடங்கியது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்தத் தேர்தலில் ஒன்பது இடங்களைக் கைப்பற்றியது. இந்தத் தேர்தலில் எம். எச்.எம். அஷ்ரப் அவர்களை தேசியத் தலைவராகவும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை தேசியக் கட்சியாகவும் பரிணமிக்கச் செய்தது. 1994 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி அரசில் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அவர் காலத்தில் திட்டமிடப்பட்ட பணிகளில் ஒலுவில் துறைமுகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், காலித் துறைமுக அபிவிருத்தி, எலிசபத் இறங்குதுறை அபிவிருத்தி போன்றவை இன்றும் எம்மத்தியில் நிலைத்து நிற்க வல்லன.

புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை வரைவதில் அஷ்ரப் மிகத் தீவிரமாக உழைத்திருந்தார். ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். அதன் பெறுபேறாகத் தான் ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றும் பெரும் பொறுப்பு அவருக்குக் கிட்டியது. சுமார் 3 மணித்தியாலங்களாக அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் உரையாற்றிய உரை இலங்கை அரசியல் வரலாற்றில் நினைவு கூரப்படும் சிறப்புக்குரியதாகும்.

அரசியல் என்பது அஷ்ரப் அவர்களின் வாழ்வில் ஒரு சிறு பகுதி மட்டுமே. அதற்கு அப்பால் அஷ்ரப் பல்துறை சார்ந்த ஆளுமையே அவரை ஒரு மகா புருஷராக எம்முடன் நடமாட வைத்துள்ளது. அஷ்ரப் அவர்களின் பேச்சுத் திறனும் தர்க்கிக்கும் ஆற்றலும், விவாதத் திறனும் மெய்மறக்கச் செய்யும் வல்லமை கொண்டவை. மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் வாழ்க்கை ஓட்டத்தை அணுகி ஆராய்வோர் அவரிடம் அமானுஷ்யமான ஒரு ஆற்றல் பரிணமிப்பதை ஏற்றுக் கொள்வார்கள்.

அந்த வகையில் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் ஒரு வாழ்க்கைத் தத்துவமாக நிற்கின்றார். அதனால் தான் அவரால் மரணத்தை நோக்கி சிந்திக்க முடிந்தது. மரணத்தோடும் அவரால் போராட முடிந்தது, அவரால் மரணத்தை நோக்கி அறைகூவல் விடுக்கவும், மானுடத்தை நோக்கி நேசக்கரம் நீட்டவும் முடிந்தது. அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனபதி கிடைக்கவும், அவருடைய கப்று சுவனபதியால் விசாலமாக்கப்படவும் வல்ல அல்லாஹ்விடம் நாம் பிரார்த்திப்போம்.

ஜனாதிபதி தேர்தல் சட்டங்கள் மற்றும் செலவுகள் தொடர்பில் ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்திய தேர்தல் திணைக்களம்

புத்தளத்தில் தேர்தல் ஏற்பாடுகள் முழுமையாகப் பூர்த்தி - மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பீ. ஹேரத்

(அரபாத் பஹுர்தீன், இர்ஷாத் ரஹ்மத்துல்லாஹ்)
(படங்கள்: முஸ்பிக்)

எதிர்வரும் 21ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டம் மற்றும் செலவுகள் தொடர்பில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் புத்தளம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பீ ஹேரத் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேர்தல் திணைக்கள ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க, இலங்கை பத்திரிகையாளர் பேரவையின் பணிப்பாளர் நாயகம் திலீப் சந்தன கருணாநாயக்க உள்ளிட்ட தேர்தல் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் தேர்தல் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்க உரையாற்றுகையில், “ஊடகவியலாளரும், அரசியலும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டதாகவும், பின்னிப்பினைந்ததாகவே இன்று காணப்படுகின்றது.

மேலும் இன்றைய தேர்தல் மேடைகளில் பிரதான கட்சித் தலைவர்களின் சில பேச்சுக்கள் இலங்கை அரசியலை கேள்விக்குறியாக இதுவா இலங்கையின் அரசியல் என்ற கேள்வியை மக்கள் மத்தியில் உண்டாக்கியுள்ளது. மேலும் தேர்தல் தினத்தில் சமூக ஊடகங்கள் முடக்கப்படும் என்கின்ற செய்தி இப்போது பரவி வருகிறது. அது முற்றிலும் பொய்யானது. அப்படியான எந்த நிலையும் ஏற்படாது.” என்றார்.

பின்னர் புத்தள மாவட்ட தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில் புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்ட செயலாளருமான எச்.எம்.எஸ்.பீ.ஹேரத் குறிப்பிடுகையில், “எதிர்வரும் 21 ஆம் திகதி நடை பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் 663,673 பேர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் புத்தளம் மாவட்டத்தில் 14967 அரச ஊழியர்கள் தபால் மூல வாக்குகளை அளித்துள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள 5 தேர்தல் தொகுதிகளிலும் சேர்த்து மொத்தமாக 470 வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வாக்குகளை எண்ணும் பணிகளுக்கென புத்தளம் சென் அன்றூஸ் பாடசாலை, பாத்திமா மகளிர் கல்லூரி மற்றும் செய்னப் ஆரம்பப் பாடசாலை என்பன தயார்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் 54 கணக்கெடுப்பு நிலையங்களும் 8 தபால் மூல கணக்கெடுப்பு நிலையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், தபால் மூல வாக்குகள் 21ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் 21ஆம் திகதி அளிக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டிகள் 4 மணிக்குப் பின்னர் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு கொண்டுவரப்பட்டு வாக்குள் எண்ணும் பணிகள் இரவு 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

இதே வேளை பூக்குளம் வாக்குச் சாவடிகளுக்கு தேவையான அதிகாரிகள் மற்றும் வாக்குப் பெட்டிகள் என்பன வில்பத்து வனப்பகுதி ஊடாக கொண்டு செல்ல தேவையான அனுமதியினை வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் பெற்றுள்ளதாகவும், கல்பிட்டி முகத்துவார வாக்குச் சாவடிக்கு படகுகள் அல்லது டெக்டர் மூலம் அதிகாரிகள் மற்றும் வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்படும்.” என்றார்.

இந்த நிலையில் அன்றைய தினம் ஏதும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படலாம் என்ற முன்னெச்சரிக்கையாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தயார் நிலையில் வைக்கப்படுவார்கள் என்றும் இவர்களுக்கு உதவியாக பொலீஸ் மற்றும் இராணுவத்தினர் ஈடுபடுவார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்டதில் உள்ள தமிழ் மற்றும் சிங்கள மொழி ஊடகவியலாளர்கள் சுமார் 40 பேர் பங்கேற்றிருந்ததுடன், புத்தளம் சிங்கள பாடசாலை ஒன்றின் உயர் தரத்தில் அரசியல் பாடம் கற்கும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு ரணில் விக்ரமசிங்க

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜெமில்

(எம். எப். றிபாஸ்)

சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு, எதிர்கால இருப்பு என்பவற்றை கருத்தில் கொண்டு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த மக்கள் முன்வர வேண்டு என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமில் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருதிலுள்ள அவரது கட்சிக்காரியாலயத்தில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில் கடந்த ஆண்டுகளில் மக்கள் எதிர்கொண்ட

நெருக்கடிகளை மறந்து விடக்கூடாது நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவை சந்தித்திருந்த வேலை நாட்டை பொறுப்பேற்க இங்கு போட்டியிடும் எந்த வேட்பாளர்களும் முன் வரவில்லை ஆனால் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் அனுபவத்தைக் கொண்டு மக்களுக்காக நாட்டை பொறுப்பேற்றார்.

இன்று இலங்கை மீண்டும் அபிவிருத்தி நோக்கிய பாதையில் பயணிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவே களம் அமைத்துக் கொடுத்தார் என்பதை அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். சிறுபான்மை மக்களின் இருப்பை நிலைத்திருக்க செய்யக்கூடிய ஒரே தலைவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார்.

எனவே கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலை சரியாக பயன்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

சிறுபான்மை மக்கள் இனவாத அரசியலால் பட்ட துன்பங்கள், துயரங்களை மறந்து விடக்கூடாது இலங்கையில் இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்ட 1883 காலப்பகுதியில் ஜே.வி.பி செய்த அட்டூழியங்களை மறந்து விடமுடியாது. அதேபோன்றுதான் ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள் அவர் வழியில் வந்த சஜித் பிரேமதாசாவுக்கு வாக்களிக்குமாறு கூறுகின்றனர். அது சிறுபான்மை மக்களின் வாக்குகளை சூறையாடி சுயநலம் கருதி செயற்படுகின்ற இதரக் கட்சிகளின் தலைவர்களின் கருத்தாகும்.

எனவே, மக்கள் சிந்தித்து தன்னலமற்ற அரசியல் அனபவமிக்க சாணக்கியம் நிறைந்த வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயத் தேவையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிவில் அமைப்புக்கள்

ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்

THE CIVIL SOCIE
ROUND TA

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுடனான கலந்துரையால் ஒன்றினை சிவில் சமுக அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள மெண்டரீனா ஹோட்டலில் அண்மையில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் சிவில் சமுக அமைப்புகளின் பிரதிநிதிகள் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் புத்தி ஜீவிகள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது கலந்து கொண்டவர்கள் ஜனாதிபதியிடம் கேட்ட வினாக்களுக்கு விடையளித்து அதற்கான விளக்கங்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி, முன்னாள் ஆளுநர் அசாத் சாலி உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

வாசிப்பீராக!
07
உதயம்

பிஸ்தாமி அஹமத்

அறிவியல் சார்ந்தும் ஆன்மிகம் சார்ந்தும்

மனிதனை நோக்கி பேசிய அல்குர்ஆனின் முதல் வசனம்

அல்குர்ஆன் மிகப்பெரும் இலக்கியம் வாந பசநயவிழநவசல யனெ டவைநசயவரசந. அது அருளப்பட்ட காலத்தில் இலக்கியமும் உரை நடையும் அன்றைய புலவர்களது மொழிப் பாண்டித்தியமும் தான் உயர்ந்து நின்றன. மொழியில் தம்மை விட்டால் ஆளே இல்லை என்று மார்தட்டி பெருமிதத்துடனும் எடுப்புடனும் வாழ்ந்த அக்கால சமூகத்துக்கு தான் புனித அல்குர்ஆன் அருளப்பட்டது.

ஆனால், அது நேரடி கவிதைகளாகவோ கவித்துவம், கலைத்துவம், மொழி குறித்து பேசுவதாகவோ அமையாமல் சுநயனைபெ வாசிப்பு குறித்தும் மனித உருவாக்கம் எனப்படும் நஅடிசலழடழபல முளையவியல் (கருவியல்) குறித்தும் தான் பேசியது. முதல் ஐந்து வசனங்களில் அனைத்தையும் உள்ளடக்கியதாக அது அமைந்துள்ளமை அல்குர் ஆனின் செழுமைக்கும் சொற்சுருக்கம், பொருளடக்கம், ஆற்றொழுக்கு போன்ற அனைத்துக்கும் சான்று.

முதல் ஐந்து வசனங்களில் இறைவன், பிரபஞ்சம், மனிதன், படைப்புருவாக்கம், மனிதனது அறியாமை, அறிவுத்தேடல், பரந்த அறிவியல் உலகம் நோக்கிய பயணத்துக்கான ஆரம்ப எட்டுக்களை வைக்க அவனை திசை முகப்படுத்தல் போன்றன உள்ளடங்குகின்றன. சுருக்கமாக சொன்னால் படைப்பாளன், படைப்புகள், அறிவியல் பயணம் , அதற்கான கருவிகள் சாதனங்கள், வழிமுறைகள் குறித்து ஆன்மிகம் கலந்து இங்கு பேசுகின்றான்.

அல்குர்ஆனின் பிரதான் பேசுபொருள்கள் ஐந்துள் மனிதன் முக்கியமானவன். அப்பாஸ் மஹ்மூத் அக்காத் தனது “அல் இன்ஸான் பில் குர்ஆன்” நூலிலும் முஹம்மத் குத்துப் “அல் இன்ஸான் பைனல் மாத்திய்யதி வல் இஸ்லாம்” நூலிலும் இது குறித்து மிக அழகாகவும் விரிவாகவும் சான்றுகளுடனும் பேசுகின்றார்கள்.

மனிதன் தன்னையும் தன்னமைப்பையும் ளவசரஉவரசந தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக எண்ணற்ற வசனங்களை இறைவன் ஒன்றன் பின் ஒன்றாக விளக்குகிறான். மனிதன் ஏன்? எப்படி? எவ்வாறு? படைக்கப்பட்டுள்ளான் என்று சிந்தித்தால் மனிதன் தன்னுடைய தற்பெருமை, அகங்காரம், பொடுபோக்கு அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டு இறைவன் வகுத்த பாதையில் எந்த சிக்கலும் இன்றி பயணிப்பான்.

ஆனால் மனிதன் இதில் நன்றி கெட்டவனாக தனக்கு தானே அநியாயம் செய்பவனாக மாறி உள்ளான். சுயநலத்தால் இந்த அழகான ஒழுங்கை சிதைத்து சீர்கெடுப்பதில் முன்னின்று செயற்படுகிறான்.

பெண் குழந்தைகள் பிறந்தாலே அருவருப்பாகவும் அபசகுனமாகவும் அவமானமாகவும் கருதி உயிருடன் புதைப்பதை வழமையாகவும் வாடிக்கையாகவும் வேடிக்கையாகவும் கருதி வாழ்ந்த மக்களுக்கு மனித படைப்புருவாக்கம் யாரால் எப்படி எவ்வாறு நுணுக்கமாகவும் நுட்பமாகவும் அமைக்கப்படுகின்றன என்பதை வாசிக்கும் அளவு தேடும் அளவு அவர்களது அறிவும் தரமும் அவதானமும் ஆய்வுகளும் இருக்கவில்லை அன்று.

(மேலதிக வாசிப்பை நாடுவோர் ஹாரூன் யஹ்யா மற்றும் ஸணக்லூல் நஜ்ஜார் போன்றவர்களது நவீன நூல்களை அரபிலும் ஆங்கிலத்திலும் வாசிக்கலாம்.)

ஆனால் ஆழ்ந்து நோக்கினால் அல்குர்ஆன் மருத்துவம் , மனித உருவாக்கம் நஅடிசலழடழபல , உடற்கூற்றியல் யழெவழஅல பற்றித்தான் ஆரம்பத்தில் பேசியுள்ளது என்பதை இந்த வசனம் மூலமும் அதன் பின்னணியை வைத்தும் நோக்கினால் மிகவும் இலகுவாக புரியும்.

நான் மருத்துவம் கற்றவனோ, மருத்துவ மாணவனோ அல்ல. எனவே இங்கு நான் முன்வைக்கும் கருத்துக்களில் தவறுகள் ஏற்பட்டிருப்பின் துறை சார்ந்தவர்கள் சுட்டிக்காட்டலாம். 2007 களில் அனுராதபுரத்தில் உள்ள ரஜரட்ட மருத்துவ பீட முஸ்லிம் மாணவர்களுடன் (ஒரு சிலருடனான தனிப்பட்ட தொடர்பு காரணமாக) ரமழான் கால விசேட வகுப்புக்களை நடாத்தும் குறுங்கால சந்தர்ப்பம் வாய்த்தது. அங்கு அவர்களுடன் அறிவு பூர்வமாகத்தான் உரையாட வேண்டிய தேவையும் அவசியமும் கடப்பாடும் இயல்பாக உணரப்பட்டது. புனைவுகளோ கற்பிதங்களோ ஊகங்களோ அவர்களிடம் எடுபடாது என்பது என்னை விடவும் அவர்கள் புரிந்துதான் வைத்திருப்பார்கள்.

அவர்களது அறை முழுவதும் மருத்துவ விஞ்ஞான நூல்கள் ஆங்காங்கே மேசையில் பரந்து கிடக்கும். யழெவழஅல நூல்கள் அதிகமாக இருந்தமை இன்னும் நினைவு. சிலபோது அவற்றுள் எனக்கு எதுவும் விளங்காது. ஆனால் உடற்கூற்றியல் சார்ந்த வரை படங்களும் அவற்றின் வநசஅ களும் மனனமாயின. காலை முதல் மாலை வரை வைத்தியசாலைக்கு சென்று பயிற்சிகளில் சென்று களைப்புடன் வரும் இறுதி ஆண்டு மருத்துவ மாணவர்களும் ரமழான் கால விசேட தனிப்பட்ட அந்த சிறிய வகுப்புக்களில் பங்கெடுப்பார்கள். அவர்களுடன் இந்த வநசஅ களை பயன்படுத்தி இஸ்லாமிய நோக்கில் அல்குர்ஆன் பேசும் மனித உருவாக்கம் அவனது பணி அவனது பாதை பயணம் குறித்த விடயங்கள் பற்றி பல விடயங்களை முன்வைத்து கலந்துரையாடினோம். அவர்கள் மூலம் தான் தலைப்புகளுடன் தொடர்பான மருத்துவ விஞ் ஞானம் தொடர்பான அநேக விடயங்களை கற்றுக்கொண்டேன்.

“உங்கள் ஆத்மாவில் அநேக சான்றுகள் உள்ளன, அவற்றை நீங்கள் உற்று நோக்கி ஆராயக்கூடாதா” என்று அல்குர்ஆன் வினவுகிறது. அதே போல “ஆத்மாவிலும் அதனை சீர்படுத்தியதன் மீதும் சத்தியமாக” என்கிறான். “மனிதனை நாம் மிகவும் அழகாக படைத்துள்ளோம்” நப்ஸ் எனப்படுவது ஆன்மா என்றோ அவனது உள்ளம் என்றோ உயிர்மூச்சு என்றோ பொருள் கொள்ளலாம்.

மனித வாழ்வுக்கு அவசியமான எத்தனையோ உடற்கூற்றியல் சார் ளலளவநஅ தொகுதிகளை 1999,2000,2001 களில் முறையே 9,10,11 ம் தரங்களில் விஞ்ஞான பாடத்தில் கற்றதும் மறவாதிருக்க மனனம் செய்ததும் நினைவில் உண்டு. எலும்புத்தொகுதி, தசைத்தொகுதி, நரம்புத்தொகுதி, சுவாசத்தொகுதி, இனப்பெருக்கதொகுதி என்று அவை நீள்கின்றன. இது போக கண், காது, மூளை போன்றவற்றின் குறுக்குவெட்டு, நெடுக்குவெட்டு அவற்றின் தொழிற்பாடுகள் பணிகள் போன்றன குறித்தும் நினைவில் வைக்க அரும்பாடுபட்டேன்.

மனித வாழ்வுக்கு சுவாசம் எவ்வளவு முக்கியம், சுவாசத்துக்கு என்றே பிரத்தியேக ஓர் உறுப்பு, தொகுதி அவற்றின் செயற்பாடுகள் தொழிற்பாடுகள் அது சீர் கெட்டால் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புகள் ஏராளம்.

அல்குர்ஆன் 6ம் அத்தியாயம் 125 ம் வசனம் சுவாசக்கோளாறு, அல்லது சுவாசிக்க சிரமப்படும் நிலையை எப்படி நேர்வழியுடன் இணைத்து பேசியுள்ளது என்பதை எல்லோராலும் விரைவில் புரிய முடியாது.” யாருக்கு ஹிதாயத் கொடுக்க அவன் நாடுகிறானோ அவனது நெஞ்சறையை விரிந்து கொடுக்கச் செய்கிறான். யாரை வழி கெடுக்க விரும்புகிறானோ அவனது நெஞ்சறையை வானை நோக்கி உயர எழுபவன் எப்படி இயல்பாக மூச்சிழுக்க சிரமப்படுவானோ அதுபோல நெருக்குவாரத்துக்கும் சிரமத்துக்கும் ஆளாக்கி விடுகின்றான்”. என்கிறான். மேலே செல்லச் செல்ல வளியில் உள்ள ஒக்சிஜன் குறைகிறது என்று பின்னாட்களில் தான் விஞ்ஞானம் மூலம் கற்றுள்ளோம். 7ம் நூற்றாண்டு அரேபியர்கள் இதனை அறியவோ தெரியவோ தேடவோ வாய்ப்பில்லை.

உண்மையில் சுவாச நோயால் அவதிப்படுவோர் கூட சிறிய எளிய மேடுகளை உயர் நிலங்களை மாடிப்படிகளை கூட பெருத்த அவதியுடன் தான் கடக்க வேண்டி வருகின்றனர்.

கைத்தொழில் புரட்சியின் பின்னரான தொழில்நுட்ப முன்னேற்றம் ராட்சத தொழிற்சாலைகள் அவை கக்கி வெளியிடும் நச்சுப்புகை யால் ஏற்படும் யசைிழடரவழைெ காரணமாக வளி மாசடைந்து சுவாசத்துக்கு ஒவ்வாத நிலையை தோற்றுவித்து புவி வெப்பமடைதல் அமில மழை வறட்சி போன்றவற்றுக்கும் வித்திடுகின்றன என்பது எல்லோரும் அறிந்த உண்மை

குறிப்பாக மேல்மாகாணத்தில் அதிகமான தொழிற்சாலைகள் வெளியிடும் சுவாசத்துக்கு பொருத்தமற்ற விஷவாயுக்கள் சுவாச நோய்களை கோளாறுகளை ஏற்படுத்தியுள்ளன. மனிதனுக்காக இறைவன் அழகாக ஏற்படுத்தி தயார் செய்துள்ள பிரபஞ்சத்தையும் அதன் ஒழுங்கையும் மனிதன் தனது சுயநலன் காரணமாக சிதைத்து சீர்கெடுத்து வருவதால் தான் இயற்கை அடிக்கடி சீற்றம் கொண்டு அவனையே விழுங்கி அழித்துவிடுகிறது.

மறுமை வருகையில் கூட தன முன்னால் நிர்மூலமாகி தவிடுபொடியாகும் உலகம் கண்டு தவிக்காமல் தளராமல் ஒரு சிறு மரக்கன்றையேனும் நட்டு புவியின் சமநிலை பேண வழியமைக்கும் அவனது வழிகாட்டல் மனித வாழ்வுக்கு எவ்வளவு பொருத்தமாக உள்ளது பாருங்கள்.

அல்குர்ஆன் மனித படைப்போ ஆக்கமோ அல்ல. அது மனிதனுக்கான இறைவனின் தயாரிப்பு. மனிதனை அழகுற படைத்து இயக்குவித்து தொழிற்பட வைக்கும் அவனது அழகிய வழிகாட்டி.

இந்த உண்மைகளை அறியாமல் வாசிக்காமல் தேடாமல் அவன் எப்படி முதல் கட்டளையை முழுமையாக செய்தவனாக மாற முடியும்.

நவீன மாற்றத்துக்கான அடையாளமாக முசலி பிரதேசம் கருதப்படும்

ரிஷாட் தெரிவிப்பு!

அரசியலில் நவீன மாற்றத்துக்கான அடையாளமாக முசலி பிரதேச சபை கருதப்படுமென மன்னார், அளக்கட்டு பகுதியில் நடந்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

அண்மையில் (12) மன்னார், அளக்கட்டு - பொற்கேணியில், பெண்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் சஜித் பிரேமதாசவின் பாரியார் ஜலனி பிரேமதாச கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்.

“தாய்மார்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இக்கூட்டத்தை ஏற்பாடு செய்த சகலருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். நாட்டு அரசியலில் நவீன மாற்றம் ஏற்படப்போகிறது. இந்த மாற்றத்துக்கான அடையாளமாக முசலி பிரதேச சபை கருதப்படும். அந்தளவுக்கு இப்பிரதேச தாய்மார்கள் சஜித் பிரேமதாசவின் வெற்றிக்காக உழைக்கின்றனர். எனவே, இம்மாதம் 22இல் ஏற்படவுள்ள ஆட்சி மாற்றத்துக்கு அத்திவாரமிட்ட பெருமை, இந்தப் பிரதேசத்து தாய்மார்களுக்கே கிடைக்கும்.

ஏழைத் தாய்மார்களின் பசியை உணர்ந்தவர் சஜித் பிரேமதாச. இவரது தந்தைதான் வறுமையை ஒழிப்பதற்கு “ஜனசவிய” திட்டத்தை நடைமுறைப் படுத்தியவர். தான் ஆட்சிக்கு வந்தால் ஏழைத் தாய்மார்களுக்கு மாதாந்தம் இருபதாயிரம் ரூபாவை வழங்குவதாக உறுதியளித்துள்ளார். இதுபோன்ற நல்ல நிகழ்ச்சித் திட்டங்கள் சஜித் பிரேமதாசவிடம் உள்ளன.

இப்போது சிலர், எங்களிலிருந்து பிரிந்து ரணிலை ஆதரிக்கச் சென்றுவிட்டனர். முன்னாள் உறுப்பினர்கள் என்ற கௌரவம் இவர்களுக்கு எப்படிக் கிடைத்தது. எமது தாய்மார்கள் வழங்கிய வாக்குகளால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சென்றதாலே, இந்த கௌரவங்கள் இவர்களுக்கு கிடைத்தன. பணத்துக்காக விலைபோனதால், முசலி சமூகத்தின் கௌரவத்தை மலினப்படுத்திவிட்டனர். ஆகையால், விலைபோவோர்களுடன் நாங்கள் இல்லை என்பதை இவர்களுக்கு உணர்த்த வேண்டும். எனவே டெலிபோன் சின்னத்துக்கு வாக்களித்து, சஜித் பிரேமதாசவின் வெற்றியில் பங்காளர்களாவோம்” என்றார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகள் உக்கிரமடைந்துள்ள நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அனுராதபுரம் கலென்பிந்துனுவெவ மற்றும் கோமரங்கடவள பகுதிகளுக்கு (11) விஜயம் செய்து பெண்களை சந்தித்து உரையாடிய போது

(எம்.ரீ. ஆரிப் அநுராதபுரம்)

பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவுறுத்தும் செயலமர்வு

(இஸட்.ஏ.றஹ்மான்)

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவுறுத்தும் அம்பாறை மாவட்டத்திற்கான செயலமர்வு மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புகாரி முஹமட் தலைமையில் கடந்த 11 ம் திகதி நிந்தவூர் பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது .

இன் நிகழ்வின் பங்கு பற்றுனர்களாக முன்னாள் உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வளவாளராக சட்டத்தரணி எம்.எம்.அஸாட் கலந்து கொண்டு சிறப்பான முறையில் விரிவுரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக றிஸ்கான் நியமனம்

(எம் எச் எம் சியாஜ்,எம்.யூ.எம் சனூன்)

கற்பிட்டி பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர் எம்.எச்.யூ பரீதா இடமாற்றம் பெற்று கண்டல்குடா முஸ்லிம் வித்தியாலயத்திற்கு சென்றதை அடுத்து பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றி வந்த எம்.ஏ எம் றிஸ்கான் இப்பாடசாலையின் புதிய அதிபராக 13ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் புத்தளம் வலய கல்விப் பணிமனையின் திட்டமிடல் பணிப்பாளர் என்.எம்.ஆர் தீப்தி பெர்ணான்டோ மற்றும் ஆசிரியர் ஸ்தாபனப் பிரிவின் பிரிவின் பணிப்பாளர் கே.ஏ காந்தி லதா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் பேசும் மக்களுக்கு சிறந்த தலைவர் சஜித் பிரேமதாச

(எம்.எப்.றிபாஸ்)

தமிழ்,முஸ்லிம், சிங்கள, சமூகம் இந்நாட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டுமாகவிருந்தால் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆட்சிபீடம் ஏற்றவேண்டும்.

அப்போதுதான் இந்த நாடும் நாட்டு மக்களும் சுபீட்சம் பெற்றவர்களாக மாற முடியும்.என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி பொருளாளரும், உயர் பீட உறுப்பினருமான ஏ. சீ. யஹியாகான் தெரிவித்தார்

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதசவை ஆதரித்து திறந்து வைக்கப்பட்ட காரியாலயத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீமின் கரத்தை பலப்படுத்துவதன் மூலம் சஜித் பிரேமதாசா நிச்சயம் வெற்றி பெறுவார்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி நாட்டையும், நாட்டின் வளங்களையும் கொள்ளையடித்த கூட்டத்தினை எதிர்வரும் தேர்தலுடன் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

இவர்களது பொய் பிரச்சாரங்களுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா இந்த தேர்தலிலே வெற்றி பெறுவது உறுதி செய்யப்பட்ட விடயமாகும் இந்நிலையில் ஸ்ரீ. மு. காங்கிரஸ் கட்சியை நேசிக்கின்ற நாம் இப்பிரதேசத்தில் ஒன்றாக இணைந்து முழுமையான பங்களிப்புக்களையும் செய்ய வேண்டும்.

போராளிகளாகிய நாம் வீடு வீடாகச் சென்று சஜித் பிரேமதாசாவின் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு மக்களை ஒன்று திரட்டுவதோடு ஊழல் நிறைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து கொள்ளை கும்பலை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எனவும் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் களத்தில்

PIRASHANTH SALO

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து முல்லைத்தீவு உடையார்கட்டு நகரப் பகுதியில் கிராம பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் தேர்தல் பிரச்சாரப் பணி இடம்பெற்றது.

தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள வாக்காளர்களை சந்தித்து அவர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியிடப்பட தேர்தல் விஞ்ஞானத்தை மக்களிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் வழிகாட்டல்கள்

இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 2024.09.21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பின்வரும் வழிகாட்டல்களை கவனத்திற்கொண்டு செயலாற்றுமாறு இலங்கை முஸ்லிம்களிடம் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா வேண்டுகோள் விடுக்கிறது.

நாட்டில் கடந்த 100 வருடங்களுக்கும் மேலாக அரசியலுக்கு அப்பால் நின்று சமூக, சமய, சன்மார்க்கப் பணிகளை மேற்கொண்டுவரும் ஒரு மார்க்க, சமூக வழிகாட்டல் செய்து வரும் சபையே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா என்பதை சகலரும் அறிவர். அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எந்தவொரு வேட்பாளருக்கும் எந்தவோர் அரசியல் கட்சிக்கும் ஆதரவாகவோ, எதிராகவோ செயற்படுவதில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் எமது தாய் நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்திற்காகவும் குடிமக்களது நல்வாழ்வுக்காகவும் அதிகம் பிரார்த்திப்போம், இறையுதவியைப் பெற்றுத் தரும் நற்கருமங்களில் எம்மை ஈடுபடுத்திக் கொள்வோம்.

ஜனநாயக நாடொன்றில் எவரும் எந்தக் கட்சியும் தேர்தலில் போட்டியிடலாம். தான் விரும்பும் வேட்பாளரை ஆதரிப்பது அவரவர் உரிமையாகும். இந்த தேசத்தின் குடிமக்களாகிய முஸ்லிம்கள் தமது வாக்குரிமையை பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு போதும் வாக்களிப்பதில் அசிரத்தையுடன் நடந்து கொள்ளலாகாது.

பொதுவாகவும் தேர்தல் காலங்களில் குறிப்பாகவும் முஸ்லிம்கள் வார்த்தையளவிலோ செயலளவிலோ எந்தவொரு குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது. வதந்திகளைப் பரப்புதல், வீண் விதண்டாவாதம், சண்டை சச்சரவுகள், வன்செயல்களில் ஈடுபடுவது ஈமானைப் பாதிக்கும் அம்சங்கள் என்பதைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.

ஆலிம்கள் மிம்பர் மேடைகளில் எந்தவொரு வேட்பாளருக்கும் அரசியல் கட்சிக்கும் சார்பாகவோ எதிராகவோ பேசுவதை முற்றாக தவிர்த்துக் கொள்வதுடன் மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களை கடைபிடித்தொழுகுமாறு பொது மக்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

மேலும் பள்ளிவாசல்களை தேர்தல் பிரசாரங்களுக்கோ அதனுடன் தொடர்புபட்ட வேறு விடயங்களுக்கோ பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் நிதானமாக நடந்துகொள்வது கடமையாகும். முஸ்லிம் சமூகம் எப்போதும் ஒற்றுமையையும் சகவாழ்வையும் பேணும் வகையில் முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும்.

பிரபஞ்சத்தின் அத்தனை விடயங்களும் அல்லாஹ்வின் நாட்டப்படியும் திட்டப்படியுமே நடந்தேறுகின்றன என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்துள்ள நாம், தேர்தலில் யார் வென்றாலும் அது அல்லாஹ்வின் முடிவு என்பதை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வது எமது கடமையாகும்.

ஆலிம்கள், மஸ்ஜித் நிர்வாகிகள், புத்திஜீவிகள் பொதுவாகவும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் மாவட்ட மற்றும் பிரதேசக் கிளை அங்கத்தவர்கள் குறிப்பாகவும் மேற்சொன்ன அறிவுறுத்தல்களுக்கமைய பொது மக்களை வழிநடத்த வேண்டுமென அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா வேண்டுகோள் விடுக்கிறது.

முஃப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி
தலைவர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

அஷ்-ஷைக் எம். அர்கம் நூராமித்
பொதுச் செயலாளர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

அருவிக்கரை
உதயம்

நாச்சியாதீவு பர்வீன்

குருவியொன்று வந்து கூட்டிப்போயிற்று..

(கெக்கிராவ ஸுலைஹா)

நம் பொறுமையை மிக சோதிக்கும், பலத்தை பரீட்சிக்கும் கடினமான விஷயங்களுமே பின் ஏதேனும் நல்லதன்பால்,ஒரு நல்வெற்றியின் பால் நம்மை இட்டுச் செல்லுமா? பார்க்கலாம் என்றெண்ணி, கொண்டாட்ட மனநிலையை கைக்கொள்கிறேன். அந்த மனநிலை இல்லை எனில், நானும் இல்லை. மூடியபடியே தான் கிடக்கின்றனவா, நமை சுற்றிலும் கதவுகள்? கொஞ்சம் வெள்ளை மனசோடு ஓடிப்போய் திறந்து வைக்க முயன்று பார்க்கிறேன்.

ஆண் ஆசிரியர்கள் கொஞ்சம் பேர் குழுவாக கூடி, இங்கிருந்து கொஞ்சம் தொலைவு பட்ட ஊரின் பேர் சொல்லி பேசிக்கொள்கிறார்கள்

நாவல் பழம் பறித்து வர மாலையில் பயணப் படுகிறார்கள் போல. ம்ம்ம் புரிகிறேன். மனசு சட் சட்டென்று புறப்பட்டு விடுகிறது போகத் தான் அவர்களோடு..

தோழி ஒருத்தி பேசுகிறாள், அப்புறம் கூட்டிப் போகிறாள் என்னை. அழகு சூழலில் அவள் தங்கையின் வயல் வெளி, மரக்கறி தோட்டம். ஒரு சிறு பயிரும் காலுக்குள் நசுக்குண்டு விட வேண்டாம்.கவனமாய் நடக்கிறேன் வரம்புகள் வழியே. ஆழ்ந்து நேசம் செய்கிறேன் என்னைச் சுற்றிக் கிடக்கும் இவ்வியற்கை, மேலும் யாவற்றின் பேரிலும். மேலும் மானுடர் யாபேரிலும். அர்த்தமற்ற உரையாடல்களை எங்கிருந்தும் வந்த எவராவது தொடர்ந்தபோது, ஓட்டுக்குள் தலை இழுத்துக் கொள்ள வேண்டும் நான். ம். பழகி வருகிறேன் அப்படிச் செய்ய.அது இலகு

ம்ம்..நான் யோசித்து யோசித்து பார்க்கிறேன். திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரல் ஒன்றுமிருக்க வில்லை நேசித்தல் நிமித்தம். அது போலவே, துரோகங்கள் நிமித்தம் பழிவாங்குவதற்கு என்றும் எந்த ஏற்பாடுகளும் இருக்கவில்லை என்னிடம்.

இருந்தும்,பருவகாலங்கள் பரீட்சித்த படிதான், என் பலத்தையும்,உறுதியையும ,சக்தியையும்.

புரியாமை நெருப்பும், நிச்சயமின்மைகளும் தழுவித் தழுவி வரப்பார்க்கிறது என்னிடத்து..

தோழர் யுளைாய ஆயசயமையலயச இன் காலையில் படித்த கவிதை நெஞ்சுள் வந்து கொண்டே இருக்கிறது..

“எங்கு போவதென்று தெரியாதோர் உலகம்..“

என்று ஆரம்பிக்கும் அவரது அந்த கவிதை. ஆழ் தத்துவம்.

வீட்டை விட்டு செல்வதாக கூறிவிட்டு
எங்கு செல்வதென்று தெரியவில்லை..
பேருந்து நிலையத்தில்
இரண்டு மணிநேரம் காத்திருந்து விட்டு
நள்ளிரவில் தெருவுக்கே திரும்பினேன்.
தெருவில் இரண்டு முறை நடந்தும்
எனக்காக அங்கு யாரும் காத்திருப்பதாய்
தெரியவில்லை..
நம்மை வரவேற்கவும் வழியனுப்பவும்
ஒருவர் கூட இல்லை
என்பது வாழ்வின் ஆகப்பெரிய துயரம் அல்லவா
தெருமுனைக்கு நடந்து கோடியில் இருந்த
குளத்துத் துறை கல்லில்
காலை நீட்டி அமர்ந்தேன்
பொடி கெண்டை மீன்கள் காலை மொய்த்தன..
பின்பு எழுந்து தெருவின் ஓரத்தில்
இருந்த ஆலமரத்தின் பௌர்ணமி நிழலில்
அமர்ந்திருந்தேன்..
பறவைகள் இரையை தேடி செல்லும் நேரம்
அதன் இரைச்சல் உசுப்பியது
மீண்டும் பேருந்து நிறுத்தமே
சென்றேன்..
நடத்துநர் எங்கு போவதென்று தெரியாதோர்
ஏறிக்கொள்ளலாம் என்றார்
இருக்கையில் அமர்ந்திருந்த
எல்லோர் கண்களிலும் ஒரு இரவு
மடித்து கிடந்தது..
தனக்கென்று வீடில்லாத இரவு அது..
தனக்கென்று யாருமில்லாத இரவு அது..

அனிஷா மரைக்காயர்க்குபோல ஒரு பேருந்து வருமா எனக்கும்? எங்கே போவது என முடிவு இல்லாத வெறுமைநொடிகள் எல்லோருக்கும் வரும் தான் போலும்.எவரும் கைவிட நேர்ந்த போதெல்லாம் எனை தூக்கியெடுத்து நான் எழுந்து கொள்ள வேண்டும். என்ன செய்ய நான்?என் கண்களில் எவரும் மடித்துவைத்த இரவின் இருட்டை விரட்டி விட நான் என்ன செய்ய வேண்டும்..?

பொடி கெண்டை மீன்கள் வரக்கூடும் காலை மொய்க்க, ஆலமரத்தின் பௌர்ணமி நிழல்

அள்ளி எடுக்கக் கூடும் அணைத்து என்னை,

பறவைகள் இரைச்சல் உசுப்பச் செய்யும்..

பார்த்துக் கொண்டே இருந்தேன் தெருவை.

அப்புறம் குருவி ஒன்று வந்து கூப்பிட்டுப் பார்த்து கூட்டிப் போயிற்று என்னை. சட் சட்டென்று ஆயத்தம் ஆகி, சேலை ஒன்றை எடுத்து, உடுத்திக்கொண்டு, ஒரு கல்யாண வீட்டுக்குப் போய் வருகிறேன்.. ம்ம்.. அப்படி அப்படித் தான் எல்லாம் ஆயிற்று இன்று.

சவாரி செய்தல்..

தந்தையின் முதுகிலேறி
விந்தையாய் சவாரிசெய்து
அகந்தையாய் வாழ்ந்து
அகமகிழ்ந்தோம் அன்று

தனயன் அல்லது
தாய்மாமன் முதுகிலேறியும்
முந்திய காலத்தில்
சவாரிசெய்து
சந்தோஷப்பட்டோம்

நெருங்கிய நட்புகள்
ஒருவரை ஒருவர்
முதுகில் ஏற்றி சவாரிசெய்து
ஆனந்தப்பட்டோம்

சவாரிக்கு
குதிரையின்றி
யார்முதுகில் ஏறியேனும்
எப்படியாவது
சாத்தியமாகியது
இளம்பராயத்து சவாரிகள்
இப்போதும்
சவாரி செய்கிறார்கள்
எல்லாத்துறையிலும்
குதிரையின்றிய சவாரி
குதூகலமாய் நடக்கிறது

குறிப்பாக சொல்வதானால்
அப்பாவி வாக்காளன்மீதேறி
அரசியல்வாதிகள்
இப்போது செய்யும் சவாரி
தப்பாமல் நடக்கிறது

போலிப்புன்னகை
பொதுவுடமை தத்துவம்
நீலிக்கண்ணீர்
நிறைய பொய்யென
அள்ளியிறைத்து
நடக்கிறது அரசியல் சவாரி

வீதிகள் தோறும்
விளம்பரப்பதாகை
நாதியற்ற சமூகத்தின்
நடைப்பிணமிவர்
தேர்தல் காலத்தில்
வாசல்தேடி வருவார்கள்
சமூகத்தின் முதுகிலேறி
சவாரிசெய்ய.....

இ.ரீ ஜனா.

சத்தார் எம் ஜாவித்

மனித சமூகத்திற்கு கிடைத்த அறிவுப் பொக்கிசம்

முஹம்மத் (நபி) ஸல்

(16ஆம் திகதி திங்கட்கிழமை நபியவர்களின் ஜனன தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை எழுதுப்பட்டுள்ளது)

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மனித சமூகத்திற்கு கிடைக்கப்பெற்ற அறிவுப் பொக்கிசமாகும்.

அகிலத்தார்க் ஒரு அருட்கொடையாக இவ்வையகத்திற்கு வந்துதித்த உத்தம நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் ஜனன தினத்தை உலகலாவிய முஸ்லிம்கள் மீலாத் தினம் என்ற சொற்பதத்துடன் சமய நிகழ்வுகள் மூலம் அந்தத்தினத்தை மரியாதையுடன் கொண்டாடி வருகின்றனர்.

அறியாமையில் மூழ்கி நல்லது எது கெட்டது எதுவென்று தெரியாது கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற வகையில் கொலை, கொள்ளை, களவு, குடி, சூது, விபச்சாரம், என்ற மனிதனால் மட்டுமன்றி அல்லாஹ்வினாலும் விரும்பத்தகாத கலாசார செயற்பாடுகளில் மண்டியிட்டுக்கிடந்த மனித சமூகத்தினை அதிலிருந்து மீட்டு அவர்களை மனிதப் புனிதர்களாக ஆக்கி இஸ்லாம் என்றால் என்ன என்பதற்கு அர்த்தம் கற்பித்த மாமனிதராக வாழ்ந்து காட்டியவர்தான் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களாகும்.

அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே காரணத்தினாலும் உன்னதமான புனித இஸ்லாத்தை உலகிற்கு வெளிக் கொண்டு வருவதற்கும் தன் உயிரையே துச்சமென நினைத்து உறவகளை இழந்தும், உடமைகளை இழந்தும் ஏன் தான் பிறந்த சொந்த மண்ணையே இழந்த ஒரு தியாகச் செம்மல்தான் நபியவர்கள். அவர்களின் வாழ்வில் பட்ட துன்ப, துயரங்கள் சொல்லிடங்காது என்றாலும் அவரிடம் இருந்த பொறுமை, உண்மை, சகிப்புத் தன்மை, தியாக மனப்பான்மை, மற்றவரை மதித்தல்இ கண்ணியங் கொடுத்தல்இ நம்பிக்கை உள்ளிட்ட சகல விடயங்களும் அவரிடம் ஒருமித்துக் காணப்பட்டதன் காரணமாகவே அவரின் தியாகம் இன்று வரை நிலைத்து நிற்பதுடன் அவரின் போதனைகளை முஸ்லிம்கள் ஏற்று நடக்கின்றனர்.

இவ்வாறான ஒரு உத்தமருக்கு முழு மனித சமூத்தையும் வழி காட்டுவதற்காக அல்லாஹ்வால் அவனது தூதருக்கு கொடுக்கப்பட்ட மாபெரும் பொக்சிசமே புனித அல் குர்ஆனாகும். அல்லாஹ்வின் கட்டளைப்படியும் அவன் நபியவர்களுக்கு வழங்கிய அல்குர்ஆன் எனும் பொக்சிசத்தின் மூலமுமே நபியவர்கள் அறியாமையில் மூழ்கியிருந்த சமூகத்தை நல்வழிப்படுத்தி மனிதப் புனிதர்களா ஆக்கினார்கள்.

நபியைப் படைக்கா விட்டால் இந்த வையகத்தையே படைத்திருக்க மாட்டேன் என்று அல்லாஹ் புனித அல்குர்ஆனில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளமையானது அவர் இந்த உலகத்தில் மட்டுமல்ல மறு உலகிலும் அல்லாஹ்வின் உண்மையான அடியானாகவும், உலகத்திலும் சரி மறுமையிலும் சரி அல்லாஹ்விற்கு மிக விருப்பமான முதல் மனிதராக காணப்படுகின்றார் என்பதனை இஸ்லாமியர்கள் மட்டுமல்லாமல் முழு உலகமுமே மெய்சிலிர்த்து நிற்கின்றது எனலாம்.

இப்படிப்பட்ட உன்னத நபியவர்கள் கலிமாச் சொன்ன ஒவ்வொரு அடியான் மீதும் அபார பாசமுள்ளவராக மட்டுமல்லாது தனது உம்மத்தின் மீது கொண்ட அன்பு, கருணை, நம்பிக்கை காரணமாக தனது மரணத் தரவாயிலும்கூட அவர் அனுபவித்த அந்த மரண வேதனையின் தாக்கத்தினையும், அதன் தன்மையையும் கண்டு எந்த ஒரு மனிதனாலும் சிறிதளவேனும் சிந்தித்துச் செய்ய முடியாத ஒரு காரியத்தைச் செய்துள்ளார். அதுதான் நபியவர்கள் தனது இறுதி மரண வேதனையை அனுபவித்து அதன் தாக்கத்தினை தனது உம்மத்தினர் அனுபவித்துக் கொள்ள மாட்டார்கள் என்று என்னி அந்த வேதனையை எனது உம்மத்திற்கு கொடுத்திராது அதனை எனக்கே தந்துவிடு என்று அலல்ாஹ்விடம் இரஞ்சி துஆச் செய்துள்ளார்கள். அந்தளவிற்கு தனது உம்மத்தின் மீது அவர் கொண்டுள்ள அபார பாசத்தையே குறிக்கின்றது. சாதாரண ஒரு மனிதனுக்கு கொடுக்கும் மரண வேதனையில் ஒரு வேதனையைத்தான் அல்லாஹ் நபியவர்களுக்கு கொடுத்துள்ளான் என்றால் அதன் தாக்கம் எந்தளவுக்கு இருக்கும் என்பதனை நாம் எண்ணிப்பார்க்க முடியாது.

இந்த வகையில் நபியவர்களின் இந்த புனிதமான தினத்தில் முஸ்லிம்களாகிய நாம் நபியவர்களின் சிறந்த போதனைகளை சிறிதளவேனும் பிசகாமல் அதனை பின்பற்றி நடப்பபோமானால் அதுவே நாம் அவருக்குச் செய்யும் உன்னதமான கண்ணியமாகும். அல்லாஹ்வின் கட்டளைகளையும் இறுதித்தூதரான நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் போதனைகளையும் பின்பற்றும் எந்தவொரு மனிதனும் வழி தவறிப்போனதில்லை என்பதே இஸ்லாத்தின் வரையறைகளாகும். ஒரு மனிதன் இவ்வுலகிலும், மறுவுலகிலும் சிறப்பான பேறு பெற்றவனாக ஆக வேண்டுமானால் அல்லாஹ்வினதும், நபியவர்களினதும் வழி முறைகளை பின்பற்றுவதிலேதான் இருக்கின்றது எனலாம்.

நபியின் ஜனன தினத்தை முன்னிட்டு இலங்கை அரசாங்கம் இஸ்லாம் அல்லாத ஏனைய ஒருசில நாடுகளில்கூட இல்லாத வகையில் இலங்கை அரசாங்கம் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு உத்தம நபியின் பிறந்த தினத்தை முன்னிட்டு அந்த நாளை ஒரு பொது விடுமுறை தினமாக ஆக்கித்தந்துள்ளமைக்கு முஸ்லிம் சமுகம் இந்த நாட்டின் அரசாங்கத்திற்கும் ஏனைய சமுகங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாக மட்டுமல்லாது ஏனைய சமுகங்களுடன் புரிந்துணர்வுகளுடனும், சமாதானமுமாகவும், இன நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டிய மிகப் பாரிய பொறுப்பு வாய்ந்த கடமை ஒன்று உள்ளது என்பதனை ஒவ்வொரு முஸ்லிமும் நினைவில் வைத்துக் கொண்டு ஏனைய சமுகங்களுடன் சமாதானமாக புரிந்துணர்வுடன் வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

இந்த நவீன யுகத்தில் எல்லாம் இயந்திர மயமாக்ளுக்கு உட்பட்டு மனிதன் ஒருவகையான தனிமைப் போக்கில் வாழும் நிலைமைகள் அதிகரித்து வரும் இக்கால கட்டத்தில் நபியவர்களும், இஸ்லாமும் கோடிட்டுக் காட்டிய இன ஒற்றுமையை மையமாக வைத்து செயற்பட வேண்டிய கடப்பாடு இந்த நாட்டு முஸ்லிம்களுக்கு உள்ளது.

எனவே மனிதன் என்ற வகையில் முஸ்லிம் சமுகம் ஏனைய சமுக மக்களைப்போல் நினைத்தபடி வாழ முடியாது. இஸ்லாமிய வரையறைகளை பின்பற்றியவர்களாக ஏனைய சமுகங்களுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில் இஸ்லாமிய வாழ்க்கை முறைகளை கடைப்பிடித்து நடக்கும்போது ஏனைய சமுக மக்கள் இஸ்லாத்தினதும், முஸ்லிம்களினதும் வாழ்வு முறையை விளங்கியவ்ாகளாக இஸ்லாத்தின் உண்மைத் தன்மையைப் புரிந்தவர்களாக முஸ்லிம் சமுகத்துடன் சகோதரத் தன்மையுடன் வாழ வழிவகுக்கும் எனலாம்.

A WIN FOR ALL
TOWARDS PROGRESS GEM AND JEWELLERY

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வருண லியனகே மற்றும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல ஆகியோரின் ஏற்பாட்டில் ஐய்கிய மக்கள் சக்தியின் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண மாநாடு பத்தரமுல்லையில் உள்ள Cinnamon Lakeside இல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் முக்கியஸ்தர்கலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கலந்துகொண்டனர். இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிற்துறையின் இயங்கும் இரத்தினபுரி கொழும்பு மற்றும் பேருவளை இரத்தினக்கல் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஐய்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுடன் கைகோர்த்து இரத்தினக்கல் மற்றும் ஆபரணதுறையின் முன்னேற்றத்திற்காக பல தீர்மானங்களை எட்டுவதில் இணக்கம் கண்டனர். (பி.எம். முக்தார்)

வீசா மோசடி வழக்கில் பணிப்பாளர் நாயகத்திற்கு நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு

மூதூரில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

பாரிய இலத்திரனியல் வீசா மோசடி தொடர்பில் இந்த அரசாங்கத்தின் அமைச்சரவைக்கும்,சம்பந்தப்பட்டோருக்கும் எதிராக உயர் நீதிமன்றத்தில் தாங்கள் தாக்கல் செய்த மனித உரிமை மீறல் வழக்கில் இன்று (13) வாதாடிவிட்டுத்தான் மூதூருக்கு ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக வந்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முதூரில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றினார்.

அங்கு,தொடர்ந்து உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் கூறியதாவது,

இந்த அரசாங்கம் வீசா தொடர்பில் 2400 மில்லியன் டொலர் மோசடியில் ஈடுபட்டுள்ளது.இந்த மோசடி மத்திய வங்கி மோசடியையும் விட 100,150 வீதத்துக்கு மேற்பட்ட மோசடியாகும். இந்த மோசடி தொடர்பில் நானும் சக பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் மற்றும் பாடலி சம்பிக ரணவக்க ஆகியோரும் இணைந்து உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தோம்.அந்த வழக்கில் சட்டத்துக்கு அமைவாக கேள்விப்பத்திரம் கோரப்படாமல் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு கொந்தராத்து வழங்கப்பட்டதென்றும் குறிப்பிட்டு ,அதில் சட்டம் ஒழுங்கு அமைச்சர், அமைச்சின் செயலாளர், குடிவரவு குடியகல்வுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டிருந்தோம்.

இந்த வழக்கு இரண்டாவது தடவையாக இன்று (13) விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ,முன்னர் மூன்று நீதியரசர்களும் புதிய வீசா நடைமுறைக்கு இடைக்கால தடையை பிறப்பித்திருந்த நிலையில், நீதிமன்ற உத்தரவை மீறி முந்திய வீசா முறைக்கு திரும்பாது நீதிமன்றத்தை அவமதித்ததற்காக குடிவரவு குடியகல்வுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டனர்.

சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக வந்த பின்னர் முஸ்லிம் சமூகத்தின் இருப்புக்கும் அதனுடைய எதிர்பார்ப்புகளுக்கும் அவருடன் இருக்கும் முஸ்லிம் தலைமைகள் பொறுப்பேற்போம்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு அளிக்கும் வாக்குகள் அறவே பயனற்றவை.

சஜித் பிரேமதாசவின் நல்ல குணாம்சங்கள் பற்றி வெவ்வேறுவிதமாக ஒவ்வொருவரும் விமர்சிப்பார்கள். முஸ்லிம் சமூகத்தின் அண்மைக்காலப் பிரச்சினைகளில் அவருடைய சிறப்பான நடத்தைகளைப் பார்த்தோம். அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் நடத்தைகளையும் பார்த்தோம். – என்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜிதின் வெற்றி உறுதி

ஐ.ம.ச. அமைப்பாளர் ஹசனலி தெரிவிப்பு

(எம்.சி. அன்சார்)

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலானது நாட்டிற்கும், மக்களுக்கும் தீர்மானமிக்கதாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நிச்சயம் வெற்றிபெறுவார். அவர் தமிழ், முஸ்லிம் உட்பட சிங்கள மக்கள் இன, மத பேதமின்றிய வகையில் ஒன்றிணைந்துள்ளார்கள். 22ஆம் திகதி இலங்கை அரசியலில் பாரிய மாற்றம் ஏற்படும். என ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறைத் தொகுதியின் பிரதம அமைப்பாளர் எம்.ஏ. ஹஸன் அலி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சம்மாந்துறை, மத்தியமுகாம், நாவிதன் வெளி ஆகிய பிரதேசங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து சிறு பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் உட்பட அனைத்து பிரதேசங்களிலும் எமது ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரது ஆட்சியில் மிகச் சிறப்பான

பொருளாதாரம் கட்டியெழுப்பட்டு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களது எதிர்காலத்தை முன்னேற்றக்கூடிய சிறப்பான திட்டம் அவரது தேர்தல் விஞ்ஞானபத்தில் காணப்படுகின்றது நாட்டில் இதுவரை முன்னெடுக்கப் பட்டுள்ளகருத்துக் கணிப்புக்களின் அடிப்படையில் இத்தேர்தலில் சஜித் பிரேமதாசவை வெற்றியடையச் செய்ய மக்கள் தீர்மானித்துவிட்டார்கள்.

மலரப்போகும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தில் பொருளாதார நலன்கள் சிறிய வறிய மக்களையும் சென்றடையக் கூடிய யுகத்தை உருவாக்கவுள்ளதுடன், வறுமையை முற்றாக ஒழிக்கக்கூடிய வேலைத்திட்டங்களை சஜித் பிரேமதாச நடைமுறைப் படுத்தவுள்ளார். - என்றார்.

மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செழிப்பையும் கொண்டுவருகிறது. அதுபோலவே ரபீஉனில் அவ்வல் மாதத்தில் பிறந்த எமது உயிரிலும் மேலான அன்பு நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மானிட சமூகத்துக்கு தூதுத்துவ ஒளி, விடிவு, வெற்றி, விடுதலை, அமைதி, சுபீட்சம் என அகிலத்தார் அனைவருக்கும் இறையருளை, சர்வதேசத் தூதை சுமந்து வந்தார்கள்.

அல்லாஹு தஆலாவினால் இவ்வுலகிற்கு அனுப்பட்ட அத்தனை நபிமார்களும் ஏகத்துவம், தூதுத்துவம், மறுமை வாழ்வு ஆகிய விடயங்களைத்தான் மக்களுக்கு போதித்தார்கள். இறுதி இறைத்தூதரான நபிகளார் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்களும் அதே பணியினை மேற்கொள்வதற்காகத்தான் அல்லா/ஹ தஆலாவினால் இவ்வுலகிற்கு ஓர் அருட்கொடையாக அனுப்பப்பட்டார்கள்.

இதனை பின்வரும் அல்–குர்ஆன் வசனங்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

“அவன்தான், எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக்காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்பிக்கும் படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான்.” (சூரா அல்–ஜ/முஆ : 02)

“உலக மக்களுக்கு அருட்கொடையாகவே அன்றி உம்மை நாம் அனுப்பி வைக்கவில்லை.” (சூரா அல்–அன்பியா : 107)

அந்தவகையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த ரபீஉனில் அவ்வல் மாதம் பல சிறப்பம்சங்களைப் பெறுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மீலாதுந்நபி தினம் எனப்படும் நபிகளார் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்களது பிறந்த தினமானது உலகளாவிய ரீதியில் மகிழ்ச்சியையும் சந்தோசத்தையும் வெளிப்படுத்தக்கூடிய உன்னதமான ஒரு நிகழ்வுக்குரிய தினமாகும்.

அன்னார் மனித குலத்துக்கு வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் திகழ்ந்தார்கள். அனைவருடனும் பாகுபாடின்றி, அன்பாகவும் பண்பாகவும் பழகினார்கள். மனித நேயம், சிறுவர் உரிமை, பெண்கள் உரிமை, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பவற்றுக்காக அன்னார் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். எப்போதும் எல்லா நிலைமைகளிலும் நீதமாக நடந்துகொண்டதோடு ஏழை எளியோரை, அநாதைகளை அரவணைத்து வாழ்ந்தார்கள். பல்லின சமூகங்களையும் உள்ளடக்கிய ‘மதீனா சாசனம்’ எனும் நீதமான யாப்பை அறிமுகம் செய்தார்கள். ஆன்மிகம், லௌகீகம் ஆகிய இரண்டிலும் ஒருசேர மகத்தான வெற்றியைப் பெற்றார்கள். எனவேதான் மனித வரலாற்றில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய மாமனிதராக அண்ணல் நபி ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூலம் அல்லாஹ் நபித்துவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தான். மறுமை வரைக்கும் மனித சமுதாயத்திற்கு நேர்வழி காட்டும் பொறுப்பை அன்னாரிடம் ஒப்படைத்தான். எனவே எம் பெருமானார் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மனித வாழ்வின் அனைத்துப் பகுதிகளுக்கும் வழிகாட்டும் ஏக வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள். அம்மாமனிதரின் முழு வாழ்வுமே மனித குலத்திற்கான அழகிய முன்மாதிரிகளால் நிரம்பி வழிந்தன. இந்த உண்மையை அல்–குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது:

“அல்லாஹ்வின் தூதரில் நிச்சயம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது”. (சூரா அல்–அஹ்ஸாப்: 21)

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது பற்றுவைத்தல் எனும்போது குறைந்தபட்சம் அவர்கள் மீது அதிகமதிகம் ஸலவாத்தும் ஸலாமும் (ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!) சொல்லல், அவர்களின் பெயர் கூறும் போதும் பிறர் கூறக் கேட்கும் போதும் கண்ணியப்படுத்தி ஸலவாத் சொல்லல், அவர்களது குடும்பத்தவர்கள் (அஹ்லுல்பைத்), தூய மனைவிமார்கள் மற்றும் நபித்தோழர்கள் (ஸஹாபாக்கள்) ஆகியோர் மீதும் அன்பும் கண்ணியமும் வைத்தல், ஹதீஸ்களை கற்றுக்கொள்ளல், சுன்னாக்களை பேணுதலோடு நடைமுறைப்படுத்தல், நபி ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்களின் ஆளுமைப் பண்புகளை புரிந்துகொள்ளவும் படித்து விளங்கவும் நேரம் ஒதுக்குதல், அறியாத மக்களுக்கு அன்னாரை அழகிய முறையில் அறிமுகம் செய்தல் மற்றும் அவர்களை தவறாகப் புரிந்து வைத்திருப்பவர்களுக்கு அப்புரிதலைக் களைந்து, சரியான புரிதலை அவர்களுக்கு வழங்கி நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதான நன்மதிப்பை ஏற்படுத்தல் என்பன அன்னாரின் சமூகத்தினர் என்ற வகையில் எமது கடமையும் பொறுப்புமாகும்.

யாழில். மீலாத் விழா

ஹிஜ்ரி 1446 ரபிஉல் அவ்வல் பிறை 12 (16.09.2024) ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் சிவல பள்ளி மீலாத் கொமிட்டியின் ஆதரவில் “மீலாத் விழா” இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அஷ்ஷேக் என்.எம்.எம். இர்பான் (நூரி), அஷ்ஷேக் ஏ.எம். றழீம் (மக்கி), கலாபூஷணம் பரீட் இக்பால் ஆகியோரினால் அறிவுக் களஞ்சியப் போட்டியை நடாத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மனநலமும் ஆலோசனையும்

47

இளம்பருவ மன ஆரோக்கியம்

மன ஆரோக்கியத்திற்கு ஆபத்தான காரணிகள்:

இளம் பருவம் என்பது மனநலத்தை மேம்படுவதற்கும், சமூக மற்றும் உணர்ச்சிப் பழக்கங்களை வளர்ப்பதற்குமான முக்கியமான காலகட்டம் என்பதை நாம் புரிந்து வைத்திருக்கிறோம். இருந்தாலும் இன்று பல்வேறு வகையான காரணங்களால் இளம் பருவப் பிள்ளைகள் பல்வேறு மனப் பாதிப்புகளுக்கு உற்படுகிறார்கள். அவற்றில்

ஹார்மோன் மாற்றங்கள்
சுற்றுச்சூழல் அழுத்தங்கள்
மரபணு காரணிகள்
கல்வி அழுத்தம்
போதைப்பொருள் பாவனை
துஷ்பிரயோகங்கள்
அதிர்ச்சிகரமான அனுபவங்கள்
ஊடகச் செல்வாக்கு
பொருத்தமற்ற வீட்டுச் சூழல்
சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள்

போன்றன மனநலம் பாதிக்கப்பட முக்கிய காரணங்களாக அமைகின்றன.

மன ஆரோக்கியத்திற்கு ஆபத்தான காரணிகளை மூன்று கோணங்களில் பிரித்து நோக்கலாம்.

1. தனிப்பட்ட காரணங்கள்
2. குடும்பக் காரணங்கள்
3. சமூகம் சார்ந்த காரணங்கள்

இளம் பருவத்தினரின் மன ஆரோக்கியத்திற்கு ஆபத்தான தனிப்பட்ட காரணிகள்:

சுயம் பற்றிய பிழையான கணிப்பு
தாழ்வு மனப்பான்மை
கடினமான மனோபாவம் நெகிழ்வுத்தன்மை
எதிர்மறை மனநிலை
பின்வாங்குதல்
குறைந்த சுயமரியாதை
திறமையின்மை என்ற உணர்வு
எதிர்மறையான சிந்தனை
கல்வியில் நாட்டம் இன்மை
மனச்சோர்வு
சிக்கலைத் தீர்க்கும் திறன் இல்லாமை
சவால்களை சந்திக்க முடியாமை
பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் திறன் இல்லாமை
சமூக ஆதரவுக்கான தீவிர தேவை
பயம், கூச்ச சுபாவம் போன்ற உணர்ச்சி பிரச்சினைகள்
தன்னை பற்றிய பிழையான கணிப்பு இருக்கும் என்ற எண்ணம்
தன்னை மற்றவர்களோடு ஒப்பிடுதல்

போன்ற காரணங்களாலும் மன ஆரோக்கியம் பெருமளவில் பாதிக்கப்படலாம்.

இளம் பருவத்தினரின் மன ஆரோக்கியத்திற்கு ஆபத்தான குடும்பம் சார்ந்த காரணங்கள்:

- பெற்றோரின் மனச்சோர்வு
- பெற்றோர் பிள்ளை மோதல்
- மோசமான குடும்பச் சூழல்
- பெற்றோர்களின் பொருந்தாத பழக்கம்
- பெற்றோர்களின் போதைப்பொருள் பயன்பாடு
- பிள்ளை துஷ்பிரயோகம்
- பாலியல் வன்கொடுமை

ஒற்றை பெற்றோர்

- திருமண மோதல்
- குடும்ப போதல்
- விவாகரத்து
- பெற்றோரின் வேலையின்மை
- பெற்றோரின் மேற்பார்வை இல்லாமை
- பெற்றோருடன் மோசமான இணைப்பு
- தீராத நோய்கள் அல்லது மனப்பாதிப்புகள் கொண்ட குடும்ப உறுப்பினர்
- போன்ற குடும்ப சார்ந்த காரணங்களாலும் மன ஆரோக்கியம் பெருமளவில் பாதிக்கப்படலாம்.

இளம் பருவத்தினரின் மன ஆரோக்கியத்திற்கு ஆபத்தான சமூகம், பாடசாலை, சுற்றுச் சூழல் சார்ந்த காரணங்கள்:

- சக நண்பர்களின் நிராகரிப்பு
- மன அழுத்த நிகழ்வுகள்
- மோசமான சகவாசம்
- வறுமை
- சமூக அளவிலான மன அழுத்தம்
- அதிர்ச்சிகரமான நிகழ்வுகள்
- பாடசாலை அளவிலான மன அழுத்தம்
- கல்வி சார்ந்த தோல்வி
- தனது கருத்துக்கள் எடுபடாமை
- போட்டி மனப்பான்மை
- வாய்ப்புகள் கிடைக்காமை
- அங்கீகாரம் இல்லாமை
- சமூக வன்முறை
- வறுமை
- போதைப் பொருள் பயன்படுத்தும் சகாக்களுடன் தொடர்பு
- நகர்ப்புற அமைப்பு
- மாறுபட்ட சகாக்களுடன் பழகுதல்
- நெருங்கிய உறவு அல்லது நண்பர்களின் இழப்பு
- போன்ற சமூகம், பாடசாலை, சூழல்
- சார்ந்த காரணங்களாலும்

மன ஆரோக்கியம் பெருமளவில் பாதிக்கப்படலாம்.

இவ்வாறான காரணங்களால் பாதிக்கப்படும் இளம் பருவத்தினர் மிக இலகுவாக மன அழுத்தம், மனப் பங்களிப்பு போன்ற மனோரீதியான பிரச்சனைகளுக்கு உட்படலாம்.

இது அவர்களிடம் நடத்தை மாற்றங்கள், கல்வி செயல்திறன் மாற்றங்கள், கவலை, சோர்வு, தனிமையை நாடுதல், ஊக்கம் உற்சாகம் குறைதல், கோபம் வெளிப்படுதல் போன்ற இன்னும் பல சங்கடமான மாற்றங்கள் வெளிவர காரணமாக அமையலாம்.

இளம் பருவத்தினரின் மன ஆரோக்கியத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்கள் நாம் புரிந்து கொண்டு அவர்களை பாதுகாப்பதற்கான நுட்பங்களை கற்றுக் கொள்ளவும் கற்றுக் கொடுக்கவும் நாம் தயாராக வேண்டும்.

அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

பயாஸா பாஸில்

அன்பான வார்த்தை வாழ்க்கையை வெல்லும்

வாழ்க்கை எத்தனை அழகானது என்பதைக் குடும்பம் தான் நமக்குக் காட்டுகிறது இல்லறம் எத்தனை இன்பமானது என்பதைத் தாம்பத்தியம் நமக்கு உணர்த்துகிறது.

முதலில் வாழ்வை ரசிக்கின்ற பண்பு வேண்டும் ஏனெனில் ரசனை தான் நம் வாழ்விற்குச் சுவையூட்டுகிறது.

குடும்பத்தின் மகிழ்ச்சி நம் கையில் தான் இருக்கிறது இந்த உண்மையைச் சிலர் உணர்வதே இல்லை அற்ப விஷயங்களுக்கெல்லாம் சண்டை போட்டு வீட்டையே சிலர் போர்க்களமாக்கி விடுவார்கள்.

அப்படியே நாளும், பொழுதும் போராடிக் கொண்டிருப்பதில் என்ன மகிழ்ச்சி.

தேவையற்ற வாக்குவாதங்களும், விட்டுக் கொடுக்காத பிடிவாதங்களும் வீட்டை நரகமாக்கி விடும் அன்பான வார்த்தைகளே இல்லத்தை சொர்க்கமாக்கும்.

கனிவாகப் பேசும் கணவன் மனைவி இடையே சண்டைகள் வருவதில்லை அவர்களின் வார்த்தைகள் ஒருபோதும் காயப்படுத்துவதில்லை.

ஒருவரை ஒருவர் மதிக்கின்ற குடும்பத்தில் தான் சமத்துவம் இருக்கும், சந்தோஷம் பெருகும் அப்படிப்பட்ட குடும்பங்களில் பிறக்கின்ற பிள்ளைகள் நல்ல பண்புகளுடன் வளர்வார்கள்.

கணவனாக இருந்தாலும் சரி, மனைவியாக இருந்தாலும் சரி இனிமையான வார்த்தைகளையே பேசுங்கள்.

வெளியிடங்களில் மற்றும் அலுவலகத்தில் எல்லாரிடமும் சிரித்துச் சிரித்துப் பேசி விட்டு வீட்டிற்குள் நுழையும் போது முகத்தில் இறுக்கத்தையும் பேச்சில் கடுகடுப்பையும் காட்டாதீர்கள் அது உங்கள் வாழ்விற்கு நீங்களே செய்கின்ற துரோகம்.

குடும்பம் என்றால் சின்னச் சின்ன பிரச்சினைகள் வரத்தான் செய்யும் அப்போது பதற்றம் அடைய வேண்டாம் இருவரும் அமர்ந்து நிதானமாகப் பேசுங்கள் பிரச்சினைகள் காணாமல் போய்விடும்.

அதை விட்டு விட்டு மூன்றாம் நபரிடம் உங்கள் வீட்டுப் பிரச்சினைகளைப் பேசாதீர்கள் உங்களைச் சுற்றி இருப்பவர்கள் தங்கள் காதுகளைத் தீட்டிக் கொண்டு ஆவலாய்க் கேட்பார்கள் உங்கள் குடும்பத்தை இரண்டு துண்டாக்க என்னென்ன யோசனைகள் தர முடியுமோ அதையெல்லாம் தருவார்கள் அப்படி தான் பல குடும்பங்கள் சிக்கிச் சின்னாபின்னமாகி சிதைந்து போகின்றன.

ஜாக்கிரதையாக இருங்கள் உங்கள் குடும்பத்தை அதிகதிகமாக நேசியுங்கள் அது தான் மிகப் பெரிய பலம்.

குடும்பத்தை நேசிக்கின்றவர்களால் தான் உலகத்தை நேசிக்க முடியும் உலகத்தை நேசிப்பவர்களால் தான் நல்ல உறவுகளை உருவாக்க முடியும்.

“குடும்ப நண்பர்கள்“ என்று கண்டவர்களையும் சேர்த்துக் கொள்ளாதீர்கள் முன், பின் அறியாதவர்களை வீட்டிற்கு வரவழைக்காதீர்கள் பேசுவதை மட்டுமே வைத்து யாரையும் நல்லவர்கள் என்று நம்பிவிடாதீர்கள் அப்படிப்பட்டவர்களால் கணவன்,மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டு பல குடும்பங்கள் தரைமட்டமாகிப் போயிருக்கின்றன.

உங்கள் குடும்பத்தின் நிம்மதிக்குக் கேடு விளைவிக்கக்கூடிய எந்த விஷயத்தையும் அனுமதிக்காதீர்கள்.

குடும்ப வாழ்வைக் கொண்டாடுங்கள் தாம்பத்திய சுகத்தை இணைந்து அனுபவியுங்கள் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவராய் இருங்கள் உங்கள் இல்லறம் செழிக்கும் வாழ்வில் இன்பங்கள் தழைக்கும்.

நிம்மதி



நிம்மதியின் பெரும்பகுதி அடுத்தவர்களை அவதானிக்காமல், அவர்களைப் பற்றி ஆராயாமல், அவர்களைப் பற்றிக் கதைக்காமல் இருப்பதில் தங்கியிருக்கிறது.

உங்களுக்கு சம்பந்தமற்றவற்றில் தலையிடாமல் நகர்ந்து செல்வதன் மூலமாக உங்கள் பண்பாடு பூர்த்தியாகிறது.

இந்த இரண்டிலுமோ, அல்லது இரண்டில் ஒன்றிலோ தவறும் ஒருவன் உங்கள் பாதையில் குறுக்கே வரும் போது அமைதியாக கடந்து செல்வதானது உங்கள் கண்ணியத்தைப் பாதுகாக்கிறது.

‘பிறர் என்ன நினைப்பார்களோ?’ என்ற எண்ணத்திலிருந்து எந்தளவுக்கு தூரமாகின்றீர்களோ, அந்தளவுக்கு உங்களது தூக்கத்தின் தரம் அதிகரிக்கின்றது.

- Affan Abdul Haleem -

அரபாத் பஹுர்தீன்

இராஜிநாமாச் செய்தார் அன்டன் ரூக்ஸ்

இலங்கை கிரிக்கெட் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளரான இதுவரையில் செயற்பட்டுவந்த தென்னாபிரிக்காவை சேர்ந்த அன்டன் ரூக்ஸ் தனது பதவியினை இராஜிநாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

நெதர்லாந்து ஆடவர் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயற்பட்ட அவர் குறித்த பதவியில் இருந்து விலகி கடந்த 2022ஆம் ஆண்டின் மார்ச் மாதம் தொடக்கம் இலங்கையின் களத்தடுப்பு பயிற்சியாளராக செயற்பட ஆரம்பித்திருந்தார்.

அன்டன் ரூக்ஸின் பயிற்றுவிப்பில் இலங்கை அணி களத்தடுப்பில் சிறந்த பெறுபேறுகளை காட்டியதோடு 2022ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ணத் தொடர் உட்பட பல்வேறு முக்கிய கிரிக்கெட் தொடர்களை வெற்றி கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ரூக்ஸ் இலங்கை ஆடவர் கிரிக்கெட் அணி மாத்திரமின்றி மகளிர் அணிக்காகவும் தனது சேவைகளை வழங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இவரது விலகல் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபை எந்தவித அறிக்கையையும் இதுவரையில் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1.000.000.000
FOLLOWERS ACROSS SOCIAL MEDIA
A BILLION DREAMS, ONE JOURNEY.
Thank you all

ரொனால்டோ மேலுமொரு சாதனை

பிரபல உதைப்பந்தாட்ட வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ போர்ச்சுக்கல் அணியின் தலைவராக விளையாடிவதுடன் கழகமட்டப் போட்டிகளில் தற்போது அவர் சவுதி அரேபியா லீக் தொடரில் அல் நசர் கழகத்திற்காக விளையாடி வருகின்றார். மேலும் சமூகவலைத்தளங்களில் அவரை 100 கோடிப்பேர் பின்தொடர புதிய உலகசாதனை படைத்தார் ரொனால்டோ.

39 வயதான கிறிஸ்டியானோ ரொனால்டோ சமீபத்தில் கால்பந்து அரங்கில் அதிகாரப்பூர்வமாக 900 கோல் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை படைத்தார். சமூக வலைதளங்களில் அதிகம் ரசிகர்களைக் கொண்டுள்ள விளையாட்டு வீரர்களின் பட்டியலில் ரொனால்டோ முதலிடத்தில் உள்ளார். எக்ஸ் தளம், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் என அனைத்து சமூக வலைதள பக்கத்திலும் கணக்கு வைத்துள்ள ரொனால்டோ, அண்மையில் ருசு ஊசளைவயைழ எனும் யூடியூப் கணக்கினை தொடங்கினார். இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டதில் இருந்து வினாடிக்கு வினாடி அக் கணக்கை பின்தொடரும் ரசிகர்கள் அதிகரித்து வருகின்றனர். ஒரு வாரத்திற்குள் அவரை 5 கோடி பேர் பின்தொடர்ந்தனர்.

இந்நிலையில், சமூக வலைதள பக்கங்களில் சேர்ந்து 100 கோடி பின்தொடர்கின்றவர்களை கொண்ட முதல் நபர் என்ற பெருமையை உதைப்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ பெற்றுள்ளார். யூடியூபில் 5 கோடி பேரும், இன்ஸ்டாகிராமில் சுமார் 64 கோடி பேரும், பேஸ்புக்கில் 17 கோடி பேரும், எக்ஸ் தளத்தில் சுமார் 11.3 கோடி பேரும் அரை பின்தொடர்கின்றனர்.

இதைக் கொண்டாடும் விதமாக போர்ச்சுக்கல் கால்பந்து அணி புதிய போஸ்டரை வெளியிட்டது. ரசிகர்கள் இதனை உற்சாகமாக பகிர்ந்து வைரலாக்கி வருகின்றனர்.

தெற்காசிய கனிஷ்ட தடகளப்போட்டி:

9 தங்கம் அடங்களாக 35 பதக்கங்களை வென்று 2ஆம் இடம்பிடித்தது இலங்கை

இந்தியாவில் இடம்பெற்ற 4ஆது தெற்காசிய கனிஷ்ட தடகளப் போட்டியில் இலங்கை அணி 9 தங்கப்பதக்கங்கள் அடங்களாக 35 பதக்கங்களை வென்றெடுத்து 2ஆவது இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

இந்தியாவின் சென்னை சேர் ஜவஹர்லால் நேரு சர்வதேச மைதானத்தில் மூன்று நாட்களாக நடைபெற்ற நான்காவது தெற்காசிய கனிஷ்ட தடகளப் போட்டியில் சிறப்பான திறமையை வெளிப்படுத்திய இலங்கை அணி நேற்று (14) மாலை இலங்கை வந்தடைந்தது.

இந்த மூன்று நாள் போட்டித் தொடரில் செப்டம்பர் 11ஆம், 12ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் இடம்பெற்றிருந்த. இதில் இலங்கை அணி 09 தங்கப் பதக்கங்கள், 09 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 17 வெண்கல பதக்கங்களுடன் மொத்தமாக 35 பதக்கங்களை வென்று இரண்டாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.

இலங்கையுடன் நேருக்கு நேர் போராடிய இந்தியா 21 தங்கம், 22 வெள்ளி மற்றும் 05 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தமாக 48 பதக்கங்களுடன் முதலாம் இடத்தைப் பிடித்தது. இருப்பினும், இலங்கை மற்றும் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் தங்கம் அல்லது வெள்ளிப் பதக்கங்களை கூட வென்றிருக்கவில்லை.

அதே நேரத்தில் பங்களாதேஷ் 3 வெண்கலப்பதக்கங்களையும், மாலைத்தீவு 2 வெண்கலப்பதக்கங்களையும் மற்றும் நேபாளம் ஒரேயொரு வெண்கலப்பதக்கத்தையும் வென்றிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் தெற்காசிய கனிஷ்ட (20 வயதுக்குட்பட்ட) விளையாட்டு வீரர்களின் திறமையை வெளிப்படுத்தும் வகையில் இந்த போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.